# இளவேனில்

ISSUE 21 / JANUARY 2022



கேசி தமிழ் மன்றம்

இதழ் 21 | தை 2022
ISSN 2200 - 789X

# பொருளடக்கம்

**ஆக்கம்** **பக்கம்**


- பூக்களைப் பறியுங்கள் ------------------------------------------------------------- 1
- அவரடியைத் தினம்பரவி ஆசிபெற்று வாழ்ந்திடுவோம்! ------------- 2
- பொய்மையும் வாய்மை பெறும் ------------------------------------------------ 3
- கண் இமைக்கும் நேரத்தில் ஓர் தீவிரமான சம்பவம் ------------------- 6
- காவற்கார ரோமியோக்கள் ------------------------------------------------------ 8
- பிறந்த நாள் ------------------------------------------------------------------------------ 13
- குழந்தைகளை உயரத்தில் வைத்துப் பார்க்கும் நிலை
- வரவேண்டும்! - ------------------------------------------------------------------------ 14
- இறுதி யாத்திரை ---------------------------------------------------------------------- 17
- தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாத
  ஐயர் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்!------------------------------- 24

# பூக்களைப் பறியுங்கள்

- க. நரேன்

புதுமணம் பரப்பி புதுப் பொலிவோடு
சூரியக் கதிரினைத் தழுவிட எழுந்திட்ட
பூக்களைப் பறியுங்கள்.

சின்னப் பூ இதைச்
சிதைவதற்கு முன்
சீக்கிரம் பறியுங்கள்.

காணிக்கை கொடுக்கும்
காலம் முடியமுன்
உங்கள் இருகரம் கொண்டு
பறியுங்கள் பூக்களை.

மணம் இழந்திடமுன் - அதன்
வண்ணம் கலைந்திடமுன்
மலரினைப் பறியுங்கள்.

பெறுபவர் மனம் மகிழ்ந்திடச் செய்திட
மலரினைப் பறியுங்கள்.

ஆண்டவன் சந்நிதியை அலங்கரிக்கவும்
மாண்டவர் மீதினில் மாலையாகவும்
மலரினைப் பறியுங்கள்.

காதலைக் கூறிக் கைகளிற் கொடுக்கவும்
காண்பவர் கருத்தைப் பறிக்கக்
காட்சிக்கு வைக்கவும்
கைகளாற் கவனமாய்ப் பறியுங்கள்.

கவிஞர் உள்ளத்தில் கற்பனை கொடுத்த பின்
வாசமிழந்து வடிவு நலிந்து
வாழ்வு முடியுமுன் வளமான பயன்பெற
வாடிவிழுமுன் தேடிப் பறியுங்கள்.

மாதர்தம் கூந்தலை அலங்கரித்திட
வேந்தர்தம் கழுத்தினிலேறி வெற்றியைப் போற்றிட
புதுமலர் நாடித் தேனினைத் தேனீ உண்டபின்
தாமதியாது தயக்கமில்லாது பூக்களைப் பறியுங்கள்.

(ரவீந்திரநாத் தாகூரின் ‘பூ’ என்ற
கவிதையின் கருவைத் தழுவி எழுதியது).

# அவரடியைத் தினம்பரவி ஆசிபெற்று வாழ்ந்திடுவோம்

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண் .... அவுஸ்திரேலியா

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண் ...... அவுஸ்திரேலியா



பெற்றெடுப்பாள் அம்மா பேணிடுவார் அப்பா
உற்றதுணை அப்பா உழைப்புமே அப்பா
நற்றவற்றால் நமக்கு வாய்த்தவரே அப்பா
நானிலத்தில் என்றும் நமக்குத் தெய்வமவரே

பக்குவமாய் இருக்க பாடம் அவராவார்
தக்கவொரு குருவாய் தானவரும் இருப்பார்
எக்கணமும் எம்மை நினைப்பிலவர் வைப்பார்
இப்புவியில் எமக்குத் தக்கதுணை அவரே

தோழேற்றி எம்மை தூக்கிச் செல்வாரப்பா
சுமை தாங்கியாக வாழ்ந்திடுவார் அப்பா
ஆழமுடை அன்பை அகநிறைப்பார் அப்பா
அகிலமதில் வணங்கும் அன்புத் தெய்வமவரே

கற்றவர்கள் முன்னே நிற்கவைக்க நினைப்பார்
கற்பவற்றை முறையாய் கற்கவழி சமைப்பார்
மற்றவர்கள் மதிக்க வாழுவென உரைப்பார்
மாநிலத்தில் நாளும் வணங்குந் தெய்வமரே

நீதிநெறி வழுவா வாழ்கவென மொழிவார்
நேர்மையினை நெஞ்சில் நிறைக்கவென உரைப்பார்
பாதையிலே நிமிர்ந்து நடக்கவெனப் புகல்வார்
பகலவனாய் என்றும் ஒளிர்ந்திடுவார் அப்பா

வீண்வாதம் வில்லங்கம் வெங்கோபம் விரும்பார்
வெந்தணலாய் வார்த்தைகளை வீசுவதை வெறுப்பார்
மாண்பகலா வழியினையே வரமெனவே நினைப்பார்
மாநிலத்தில் விடிவிளக்காய் வாழ்பவரே அப்பா

பஞ்சமா பாதகங்கள் பக்கமவர் பார்க்கார்
பகுத்துண்டு ஓம்புவதை மனமிருத்த நினைப்பார்
கஞ்சநிலை நஞ்செனவே கனன்றெழுந்து உரைப்பார்
கண்காணும் தெய்வமாய் காணுகிறார் அப்பா

மருத்துவராய் வந்தாலும் வழக்குரைஞர் ஆனாலும்
கணக்காளார் ஆனாலும் கலைநிபுணர் ஆனாலும்
நினைத்தவுடன் செயலாற்றும் நீண்டசெல்வர் ஆனாலும்
தலைக்கனத்தை வாழ்வினிலே தகர்த்தெறிதல் பண்பென்பார்

ஆன்மீகம் அவருரைப்பார் அறிவியலும் அவருரைப்பார்
அருந்துணையாய் அவரிருப்பார் அவரணைப்பில் நாமிருப்போம்
ஆண்டவனின் உருவாக ஆனவரே அப்பாதான்
அவரடியைத் தினம்பரவி ஆசிபெற்று வாழ்ந்திடுவோம்


# பொய்மையும் வாய்மையுடைத்து-நவாஜி

பேய்  மழை, ஒருநாளும் இல்லாத மாதிரி மேய்ச்சலுக்கு மந்தையோடு மந்தையாக வந்த ஆட்டு மந்தையின் கூட்டத்திலிருந்த சுபவீ என்ற ஆட்டுக்குட்டிக்கு, ஆம் ஒருவயது நிரம்பிய மந்தையின் செல்லக்குட்டி அது. தோற்றத்தில் உருண்டு திரண்டு வயதுக்கு மீறிய வளர்ச்சி.அதுவும் கிடாய்க் குட்டி, சொல்ல வேண்டுமா அதன் ஆட்டத்துக்கு. ஒரு இடத்தில் நின்று மேயாது அங்கும் இங்குமென அலைந்து மற்றைய மறிக்குட்டிகளையும் மேயவிடாது துரத்தியபடி, மேய்ப்பனுக்கு அதனோடு மல்லுக்கட்டுவதே பெரும்பாடு. அவன் கையில் வைத்திருக்கும் தடியினால் அகப்பட்டபோதெல்லாம் தினம் தினம் அடிவாங்கவும் தவறுவதில்லை. அப்படியிருந்தும் அதன் வயதுக்குரிய திமிர்ச் சேட்டைகள் குறைந்தபாடில்லை.
பேய் மழையுடன் சேர்ந்து காதைச் செவிடாக்கும் சத்தத்துடன் இடி மின்னலும் சேர்ந்து கொண்டது, மேய்ப்பனோ திடீரென ஏற்பட்ட மாற்றத்தால் செய்வதறியாது மந்தைகளைத் திருப்பி வந்தவழியே போகலாம் என நினைத்துச் செயற்படுவதற்குள் ஆடுகள் ஒவ்வோன்றும் ஒவ்வொரு திசையாக நாற்புறமும் சிதறி ஓடித் தொடங்கிவிட்டன. மேய்ப்பனும் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள செய்வதறியாது மந்தைகளைக் கைவிட்டு வந்த திசை நோக்கித் தங்குமிடம் தேடி ஓடத்தலைப்பட்டான்.

சுபவீ என்ற குட்டிக்கும் பயம் பிடித்துக் கொண்டது. கண் மண் தெரியாத வேகத்தில் எங்கு போகின்றோம் என ஒரு இலக்கின்றி நாலுகால் பாய்ச்சலில் ஓடத் தொடங்கியது. பயத்துடன் ஓடிக்கொண்டிருந்த சுபவீயைத் திடீரென பெரும் சத்தத்துடன் எதிரே தெரிந்த மரத்தின்மீது தாக்கிய இடிமின்னல் தடுத்து நிறுத்தியது. திடீரெனத் தாக்கப்பட்ட மரமானது கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது சுவாலைவிட்டு எரியத்தொடங்கியது. இதைக் கண்ணுற்ற குட்டி பயம் மேலிட ஓடிக் கொண்டிருந்த திசையை மாற்றி முன்னைவிட வேகமாக நாலு கால் பாய்ச்சலில் ஓடத் தொடங்கியது.

எவ்வளவு தூரம் ஓடினோம் எங்கே போகின்றோம் என இலக்கின்றி ஓடிய குட்டிக்குக் களை ஏற்பட்டதும் சிறிது நின்று தன்னை ஆசுவாசப்படுத்தியபடியே சுற்றிவர நோட்டமிட்டது. அப்போதுதான் அது உணரத்தொடங்கியது தான் தனது இருப்பிடத்தைவிட்டு வெகுதூரத்துக்கப்பாலுள்ள காட்டின் மத்தியுள் வந்துவிட்டோம் என்பதை.மேலும் அதனைப் பயம் பிடித்துக் கொண்டது. மழையோ விட்டபாடில்லை போதாக்குறைக்கு காதைப் பிளக்கும் இடி மின்னல் வேறு. மழையில் நனைந்ததால் மேலெல்லாம் குளிர்ந்து வெடவெடவென உடம்பு நடுங்கத் தொடங்கியது. மரத்தின்கீழ் ஒதுங்குவோமென்றால் முன்பு எரிந்து கொண்டிருந்த மரம் எண்ணத்தில்தோன்றி அந்த எண்ணத்தையே செயற்படுத்த முடியாமல் பயமுறுத்தியது.

...



திடநடப்பது நடக்கட்டும் என்ற வைராக்கியத்தில் மேலும் சிறிது தூரம் முன்னேறிய குட்டியின் கண்ணுக்கு எதிரே சிறு மலையொன்று தென்பட்டது. அதன் அடிவாரத்தில் இந்த மழை முடியும்வரை ஒதுங்க ஏதாவது இடம் கிடைக்குமா என்ற எண்ணம் மேலிட சிறிது நம்பிக்கையுடன் அதை நோக்கி நகரத் தொடங்கியது. ஆம், களைப்பு மேலீட்டால் அதனால் வேகமாக நடக்கவே முடியவில்லை. அடிவாரத்தை நெருங்க நெருங்க மின்னல் ஏற்படும்போதெல்லாம் தோன்றிய வெளிச்சத்தில் அச்சிறு மலை அடிவாரத்தில் குகை ஒன்று இருப்பது போன்று தென்பட்டது. குகை வாயில் போல் தென்பட்ட இடத்தை நெருங்கியதும் அதன் உள்ளே இரண்டு மூன்று வழிகள் உள்ளே போவதற்கு ஏதுவாக இருப்பதை மின்னலில் தோன்றிய வெளிச்சத்தில் காணமுடிந்தது. இப்போது குட்டியை வேறொரு பயம் பிடித்துக் கொண்டது. அப்பப்போ ஊருக்குள் வந்து மனிதர்களை, மற்றும் பிராணிகளை அடித்துச் சாப்பிடும் சிறுத்தை, நரி போன்ற மிருகங்கள் அதனுள்ளே இருந்து கொண்டால் ஆபத்தாயிற்றே எனச் சிந்தனை ஓடியது. தயங்கியபடியே குகைக்குள் புகத் துணியாமல் அடிவாரத்தைச் சுற்றி ஏதாவது மழைபடாமல் நிற்பதற்கு ஏற்ற இடம் கிடைக்கமா என நோட்டமிட்டபோது,மலையோடு சேர்ந்த பாறையொன்று குடைபோன்று வளைந்திருப்பதும் அதன் கீழ் மழைபடாமல் ஒதுங்கி நிற்கமுடியும், இடிமின்னல் தாக்கமும் ஏற்படாது என்பதையுணர்ந்து அதன் கீழ் ஒதுங்கியது.

எவ்வளவு நேரம் அங்கு நிற்பது, மெதுவாக கீழே சரிந்து படுத்து சிறிது களை போக்கியது. திடீரென அது ஏதோ ஆபத்து தன்னை நோக்கி வருவது போன்ற உணர்வு ஏற்பட படுத்தபடியே தலையை உயர்த்திப் பார்த்தபோது, சிறு நரி ஒன்று மெதுவாகத் தன்னை நோக்கி வருவதைக் கண்டது. கண்டதும் தன்னையறியாது உடலைச் சிலிர்த்துக்கொண்டு எழும்பியது. கிட்டவந்த நரியோ சிலிர்த்தெழுந்த குட்டியையும் அதன் கூர்மையான கொம்புகளையும் கொண்ட தோற்றத்தைக் கண்டதும் சிறிது பின்வாங்கி, உடனே தன்னைச் சுதாரித்துக்கொண்டு பேசத்தொடங்கியது, “ நண்பரே, பயப்படவேண்டாம். இந்த மழையில் காட்டுக்குள் அதுவும் நாட்டைவிட்டுத் தள்ளியிருக்கும் நடுக் காட்டுக்குள் ஏன் வந்தீர்” என அன்பொழுகக் கேட்டது. குட்டிக்கு நரி நண்பரே என அழைத்ததும் நன்கு விளங்கிவிட்டது ஏதோ திட்டத்துடன்தான் நரி வந்திருக்கின்றது தான் அதன் பசப்பு வார்த்தைகளில் ஏமாந்துவிடக்கூடாது என்பதில் திடமானது. இருந்தும் அதை வெளிக்காட்டாமல் ,” இல்லை நண்பா ஒரு மூலிகைச் செடியைத் தேடி வந்தேன் திடீரென மழைவேறு இடிமின்னலுடன் வரும் என நான் எதிர்பார்க்கவில்லை, அகப்பட்டுக் கொண்டேன். மழைக்காக இங்கு ஒதுங்கிக் கொண்டேன்” என்றது.

தன்னை இந்த வெள்ளாடு நம்பிவிட்டது இதே போக்கில் பேசி இதைத் தன் குகைக்குள் எப்படியும் அழைத்துப் போகவேண்டுமென்ற எண்ணத்தில் நரியும், “ நண்பா இப்போதைக்கு மழை விடுவது போலத் தெரியவில்லை தவிர நேரமும் நடுச் சாமமாகிவிட்டது, எவ்வளவு நேரம்தான் இந்தக் குளிரில் கஷ்டப்படப் போகின்றாய். எனது குகை அருகில்தான் உள்ளது உள்ளே கதகதப்பாக இருக்கும் கொஞ்ச நேரம்தானே, அப்புறம் விடிந்துவிடும் மழையும் விட்டுவிடும்.வந்து என்னுடைய விருந்தாளியாகத் தங்கிச் செல் “ என்றதும் குட்டி மறுத்து, “ இல்லை நண்பா நான் அதுவரை இங்கேயே இருந்துவிடுகின்றேன்” என்றது. “ உனது விருப்பம் நண்பா உனது நன்மைக்குத்தான் கூறினேன், சிறிது நேரத்தில் சிறுத்தையார் வரும் நேரம், இவ்வழிதான் அவரது வழித்தடம் உன்னைக் கண்டால் அவ்வளவுதான்” எனக் கூறியபடியே குட்டியின் முகத்தை நோக்கியது நரி.

நரியின் இக் கூற்றைக் கேட்டதும் சுபவீக்கு உண்மையிலேயே பயம் பிடித்துக் கொண்டது. அதே நேரம் அதன் சிந்தனையும் இந்த நரி சிறு நரி இதை எதிர்த்துப் போரிடும் உடல்வாகு எனக்குண்டு, சிறுத்தையோடெல்லாம் தாக்குப் பிடிக்கவே முடியாது. இப்போதைக்கு இதனுடன் போவோம், ஏதாவது செய்து இதனிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளலாம் என முடிவு செய்து நரியை நோக்கி, “ நண்பா நீ இவ்வளவு தூரம் எடுத்துக் கூறும்போது நான் மறுக்கக் கூடாது, உன்னுடனேயே வந்து தங்கிக் காலையில் புறப்படுவேன்” எனக் கூறி அதனுடன் போகத் தயாரானது.

நரி முன்னே சென்று குகையின் ஒரு வாயிலூடாக உள்நுழைய குட்டியும் அதைப் பின் தொடர்ந்து நடக்கத் தொடங்கியது. அந்தக்குகை வளைந்து வளைந்து பல கற் பாறை வாயில்களைத் தாண்டி நீண்டு சென்று ஒரு சிறு அறை போன்ற இடத்தில் முடிந்தது.அந்த இடத்தைச் சென்றடைந்ததும் குட்டி நரியை நோக்கி " நண்பா நீ அழைத்து வந்த வழி என்னால் தனிமையில் திரும்பிச் செல்ல முடியாதபடி பல திருப்பங்களைக் கொண்டதாயிருக்கின்றதே" என்றதும், " உண்மைதான் நண்பா, எனது உதவியில்லாமல் நீ இவ்விடமிருந்து திரும்பிப் போக முடியாது. நீ அவ்விதம் முயற்சிக்காதே. நீ வழிமாறிப்போனால் சிறுத்தையாருடைய குகைக்குள் நீயாகச் சென்று சேர்வாய் " எனப் பயமுறுத்தியது.

நரியிடம் தான் வசமாகச் சிக்கிக் கொண்டோம் என்பதை குட்டி புரிந்து கொண்டது, சமயோசிதமாகத்தான் இதனுடைய உதவியோடு வெளியேறும் வழியை நாம்தான் தேடிக் கொள்ளவேண்டும், என்ன செய்யலாம் எனச் சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்து, நரியை நோக்கி நான் சிறிது படுத்துக் கொள்ளுகின்றேன் எனக்கூறி கீழே விழுந்து படுத்து உடம்பில் சிறிது சூடேற்றிக் கொண்டது. குகையும் மிகவும் கதகதப்பாகவே இருந்தது. நரிக்கோ இதை எப்படியும் அடித்துச் சாப்பிடவேண்டும் என்ற எண்ணத்தில் சிறிது நேரம் சென்றதும், குட்டியை நோக்கி ," நீ இனி இங்கிருந்து போகமுடியாது என்னுடைய நண்பர்கள் விடிந்ததும் வருவார்கள், எல்லோரும் சேர்ந்து உன்னை ஒரு வழி பண்ணி விடுவோம்" என்றது.

இதைக் கேட்டதும் படுத்தபடியே குட்டியும் எவ்வித பயத்தையும் வெளிக்காட்டாமல்," நல்லது நண்பரே விடிந்து மாலைக்குள் இறக்கப்போகின்ற நான் அதற்கு முன்னர் உங்களுக்கும் உணவாவதில் எனக்கும் மகிழ்ச்சிதான், ஆனால் என்ன பரிதாபம் என்னைச் சாப்பிட்ட நீங்களுமல்லவா இறந்து போகப் போகின்றீர்கள்" என்றது. இதைக் கேட்டு அதிர்ச்சியடைந்த நரியும்," அது எப்படி, எங்களை மீறி இங்கு யாரும் வந்து ஒன்றும் செய்ய முடியாது. உன்னை அடித்துச் சாப்பிட்டால் உனக்காக ஏனென்று கேட்க யாருமே இங்கு வர முடியாது" எனக்கூறவும். " நான் அப்படிக் கூறவில்லையே விஷமேறிய என் உடலைச் சாப்பிட்டால் என்றுதானே கூறினேன்" என்றது குட்டியும். " என்ன கூறுகின்றாய் விஷமேறிய உடலா?" பதட்டத்துடன் கேட்டது நரி.

" ஆம், நண்பா, நான் முன்பே கூறியுள்ளேன் காட்டுக்கு வந்த காரணத்தை. நேற்றைய தினம் மேய்ச்சல் தரையில் தெரியாமல் விஷச்செடியொன்றைச் சாப்பிட்டுவிட்டேன். இதைக் கண்ட என் தாயார் பதறிப்போய் இதையேன் சாப்பிட்டாய் உடனே காட்டோரம் போய் விஷமுறிச் செடியைக் கண்டு பிடித்துச் சாப்பிடு இல்லாவிட்டால் நாளை பொழுதுக்குள் நீ இறந்து விடுவாய் எனக் கூறி அனுப்பிவைத்தார்கள். அதைத்தேடி வந்த இடத்தில் பாழாய்ப்போன மழைக்குள் அகப்பட்டு இப்போது உன்னுடன் தங்கியுள்ளேன். நான் அந்த மூலிகையைச் சாப்பிட்டால் பிழைத்துக் கொள்வேன். இல்லாமல் நான் இங்கேயே இறந்துவிட்டால் என் உடம்பில் ஊறியவிஷம் இந்த இடத்தையே விஷக்குகையாக மாற்றிவிடும். அதன் பின்னர் நீ வேறு இடம் தேடவேண்டிய கட்டாயம் ஏற்படும். விடியும்போது என்னை வெளியே விட்டாயானால் நான் அந்தச் செடியைத் தேடிப்பிழைத்துக் கொள்வேன் நீயும் உன் குகையைக் காப்பாற்றிக் கொள்வாய்." என குட்டி கூறியதைக் கேட்டதும் பதறிப் போன நரி, "இதையேன் முன்பே என்னிடம் கூறாமல் மறைத்தாய், இப்போது நீ இங்கே இறந்துவிட்டால் நானல்லவா இருப்பிடம் தேடிக் கஷ்டப்பட வேண்டும்.இப்பவே வெளிக்கிடு உன்னை வெளியே கொண்டு போய் விடுகின்றேன்" என்றதும், குட்டி நரியை நோக்கி, " நண்பா பயப்படாதே நான் மாலை வரை பிழைத்திருப்பேன், விடிந்ததும் என்னை வெளியே விட்டுவிட்டால் இறையருளால் நான் அந்த மூலிகைச் செடியைக் கண்டு பிழைத்துக் கொள்வேன்" எனக் கூறியபடியே மீண்டும் படுத்துக் கொண்டது. நரியும் அதன் கூற்றைக் கேட்டு எப்போ விடியும் எனப் பார்த்திருந்து விடிந்ததும் குட்டியை கூட்டிவந்து குகை வாயிலின் வெளியே விட்டது. வெளியே மழை விட்டு சூரியக்கதிர்களும் மரங்களினூடே எட்டிப் பார்த்தது.குட்டியும் நரிக்கு நன்றி கூறி நாலு கால் பாய்ச்சலில் காட்டைவிட்டு நாட்டைநோக்கி ஓடத் தொடங்கியது.
ஓடிக்கொண்டிருக்கும்போதே நாட்டிலே மனிதர்கள் கூறும் குறளொன்றும் அதன் நினைவில் தோன்றியது," பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த நன்மை பயக்கும் எனின்"
அதன் பொருள் குற்றம் அற்ற நன்மையைத் தரும் என்றால் உண்மை சொல்ல வேண்டிய இடத்தில் பொய்யும் சொல்லலாம் என்பதாகும்.

# கண் இமைக்கும் நேரத்தில் ஓர் தீவிரமான சம்பவம்

- தேவிகா கெங்காசுதன்

ஓர் கண் சிமிட்டலில், 'யாவிலை உயர்நிலை' பள்ளியின் வார இறுதி வந்துவிட்டது. இந்த திறமையான பள்ளியில் இருக்கும் ஆசிரியர்கள் எல்லோரும், மாணவர்களுக்கு வீட்டிற்கு செல்வதற்கு அனுமதி கொடுப்பதற்கு முன்பு, திருமதி.சுமதி ஆசிரியர் ஒன்றை அறிவிப்பதற்கு மிகவும் ஆர்வமாகவும் விரகதியாகவும் இருந்தார். குசு குசு வென ரகசியம் கதைத்த மாணவர்களை குறுக்கிட்டு, அந்த அறிவித்தலை அறிவித்தார். 'அன்பான மாணவர்களே, கவனியுங்கள்.' ' நான் உங்களிடம் வீட்டுவேலை கொடுக்கப்போகின்றேன்.' அந்த வாக்கியத்தை முடிப்பதற்கு முன்பே இடது பக்கம் இருந்த மாணவர்கள் எல்லோரும் பால் குடிக்காத மாட்டைப் போல் கத்த தொடங்கினார்கள். 'டமார்' என்று சுமதி ஆசிரியர் மரத்தால் செய்யப்பட்ட மேசேயை தட்டியதும் எல்லா மாணவர்களும் எலி போல் மௌனமாக இருந்தார்கள். 'வரும் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை உங்களுக்குப் பிடித்த தலைப்பை பற்றி ஆராய்ந்து வரவேண்டும்.' 'இதை நீங்கள் செய்யத் தவறினால், வகுப்பறை வெளியால் முட்டுக் கால்களில் இருக்கவைப்பேன்.' 'நீங்களே தெரிவு செய்யுங்கள்.' இதைச் சொன்னதும் இடது பக்கம் இருந்த குமரன், அவனின் கையைத் தூக்கினான். 'சொல்லு குமரா?' என ஆசிரியர் கூறினார். 'ஆசிரியர், எனது நாய்க்குட்டி வீட்டுவேலையைக் கடித்து விடும்' என்றான் குமரன். 'முதலாவதாக, நான் வீட்டுவேலையை ஒற்றையில் தரவில்லை, இரண்டாவது, உனக்கு நாய்க்குட்டி இல்லை.' என்று சுமதி ஆசிரியர் சொன்னார். 'புதிதாக ஒன்று வாங்கியுள்ளோம்.' என்று குமரன் மறுபடியும் ஆசிரியருடன் வாதாடினான். 'அப்படியா, அப்போது உனது நாய்க்குட்டியின் பெயரை சொல்லு?' என்று சுமதி ஆசிரியர் சொன்னதும் குமரன் பனிகட்டிப் போல் உறைந்து இருந்தான். 'பாரதியார் சொன்னது போல் "பொய் சொல்லக்கூடாது பாப்பா" என்று சுமதி ஆசிரியர் புகட்டினார். அப்போது, பள்ளி மணி அடித்தும் மின்னல் வேகத்தில் இடது பக்கம் இருந்த மாணவர்கள் எல்லாம், வகுப்பறையிலிருந்து வெளியே ஓடினார்கள். ஆனால் வலது பக்கம் இருந்த மாணவர்கள் கவனத்துடன் புத்தகங்களை அடுக்கி, சுமதி ஆசிரியருக்கு மலர்ந்த முகத்துடன் கைகளைக் கூப்பி நன்றி கூறி வெளியே நடந்தார்கள்.



சிறுத்தையின் வேகத்தைப் போல், குமரன் வீடு சென்று, அவனது கணனியுடன் விளையாடத் தொடங்கியதும், அவனது அம்மா வந்து கேட்டார், 'டேய் குமரா, ஆசிரியர் வீட்டுவேலை தந்தாரா'? 'இல்லை அம்மா'? என்று குமரன் பொய் கூறினான். 'எனக்கே பொய் சொல்லத் தொடங்கிட்டியா, ஆசிரியர் எனக்கு தொலைபேசியால் சொன்னார்' என்று அம்மா கூறினார்.

‘முதல் அதை செய், பிறகு கணணியுடன் விளையாடலாம்.’ என்று அம்மா சொன்னதும், குமரன் பெருமூச்சு எடுத்து அவனுக்கு பிடித்த தலைப்பு என்னவென்று சிந்தனையிட்டான். அப்போது தாவரங்கள், மற்றும் விலங்குகளுடன் ஒரு புகைப்படம் பார்த்தான். அப்போது தாவரங்களும், விலங்குகளையும் பற்றியும் ஆராயலாம் என்று தனக்குள்ளயே நினைத்தான். இதை அவனது அம்மாவிற்கு சொன்னதும் அவர் கூறினார், ‘எங்கே பார்த்து ஆராய்ந்து கொள்வாய்’? என்று. ‘கணனியில்’? என்று குமரன் வெறுமனேயாக பதில் கூறினான். ‘இல்லை இல்லை, நீ கணனியில் ஆராய்ந்து கொண்டால், நீ தந்திரமாக விளையாட்டுகளை விளையாடுவாய்.’ என்று அம்மா சொன்னதும் குமரன் திருப்பி சொன்னான், ‘அப்போது நான் காட்டிற்க்கு செல்கிறேன்.’ அப்பொழுது அம்மா சொன்னார், ‘நானும் வருகிறேன்.’ ‘நீங்கள் வந்தால் நான் உங்களிடம் பேச மாட்டேன்.’ என்று குமரன் சொன்னதும் அம்மா சொன்னார், ‘ஆனால் அது மிகவும் ஆபத்து கண்ணா’ என்று. அப்போது குமரன் வீட்டின் வெளியால், எழுதுகோல் மற்றும் ஒற்றையுடன் அதிக நம்பிக்கையுடன் சென்றான்.

பச்சையான காட்டில், குமரன் வலது காலை எடுத்து வைத்து தனது பயணத்தை தொடங்கினான். அவனது காதால் கேட்ட முதல் ஓசை, நதியின் தண்ணீர் சல சல வென மென்மையாக ஓடிக்கொண்டிருந்த ஒலியைக் கேட்டான். நதியின் ஒலியின் மேல் இன்னொரு சத்தத்தைக் கேட்டான். இந்த ஓசை மிகவும் வித்தியாசமாக இருந்த போது, சந்தேகத்தில் குமரன் இயல்பற்ற நதியை நோக்கினான் . குமரன் தட்டையான தரையில் வைத்த ஒவ்வொரு காலடியும், உயரமான மலைகள் கீழே உடைப்பது போல் கேட்டது. அவன் நதியின் அருகில் போனதும், ஓர் எதிர்பாராத ஓசையைக் கேட்டான். ‘அருகில் வா.’ இதை கேட்டதும் அவன் கெட்டித்தனமான வீரனைப் போல் ஓட முயற்சி செய்தான். ஆனால் குமரன் எதிர் பார்க்காத மாதிரி, ஓர்பயங்கரமான உருவம் அவனது கண்களின் முன், உட்பட்டு குமரனின் கால்களால் அது அவனை நதியின் ஓரத்தில் இழுத்து. இதனால், குமரனின் ஒற்றை மற்றும் எழுதுகோல் நதியின் தண்ணீரில் மூழ்கியது.

குமரன் அந்த பயங்கரமான மிருகத்தின் கைகளை அவனது உடலில் இருந்து வீசி, கால்களில் இரத்தம் ஏற்பட்டதால், நொண்ட ஆரம்பித்தான். எப்படியோ குமரன் தப்பித்து வீட்டில் சேர்ந்ததும், படுத்தான். ஆனால் கால்களில் ஏற்பட்ட கடுமையான காயங்களை, அம்மாவிடம் மறைப்பதற்கு, குளித்தான். ‘காற்றுள்ள போதே தூற்றிக்கொள்’ என்பதற்கேற்ப, அம்மா வாய்ப்பு கொடுத்ததும் அதை ஏற்றுக்கொண்டு இருக்கவேண்டும் என்று குமரன் குற்ற உணர்வுடன் தூங்கினான். மறுநாள், ஞாயிற்றுக்கிழமை, அவனது தீவிரமான பயணத்தில் கண்ட சுவாரஸ்யமான விலங்குகள், உருவங்கள் மற்றும் தாவரங்களைப் பற்றி ஓர் பந்தி எழுதி, திங்கட்கிழமையில், குமரனின் பயணம் மற்றும் ஆராய்ந்ததை பற்றி பள்ளி மாணவர்களுக்கு சொன்னதும், அவர்கள் சிறிது ஆச்சரியத்தில் கைதட்டினார்கள்.

# காவற்கார ரோமியோக்கள்

- சியாமளா யோகேஸ்வரன்

தமிழன் என்று சொன்னாலே தன்னாலே நினைவு வரும் தமிழீழத்துக்குத் தலையான ஊரின் தனயர்கள் நாங்கள். அப்படி எங்கள் ஊரில் என்னதான் பிரபலம் என்று மட்டும் கேட்காதீர்கள். வடை, அப்பம், தோசை என்று சாப்பாட்டுக்கு அயிட்டங்களுக்கு மட்டும் பருத்தித்துறை, பெயர் பெற்றதல்ல. நெடு தூரம் வரை வானம் தெரியாமல் அலை தவழும் கடல், நுரையோடு கதை பேசி, மோதுகின்ற அலையோடு சங்கமமாகும் வெண்பரப்பாய் பரந்திருக்கும் மணல், சின்னதாய் ஒரு துறைமுகம், கரையோரங்களில் சிறிதும் பெரிதுமான வீடுகளுடனான மீன்பிடிக் கிராமங்கள், வாடி வீடுகள், நெடிதுயர்ந்து நிற்கும் வெளிச்ச வீடு, எப்போதும் விளக்கெரிந்து கொண்டிருக்கும் சின்னச் சின்னக் குடில்களில் குடி கொண்டிருக்கும் மாதா சொரூபங்கள், மிகப் பிரமாண்டமான தேவாலயங்கள், நாடு முழுவதுமே கல்விக்குப் பெயர் பெற்ற பாடசாலைகள் என்று எம் மண்ணின் பெருமையை அடுக்கிக் கொண்டே போகலாம். அது மட்டுமல்ல, எம் மண்ணின் மைந்தனாம், எம் இனத்தின் காவலன் அவதரித்த ஊருக்குப் பக்கத்து ஊர் என்பதில் அம் மண்ணின் வாசம் எம் ஊர்க்காற்றிலும் கலக்கப் பெற்றதில் செருக்கும் கொஞ்சம் கொண்ட ஊர் எங்களூர். ஒருவர் இருவராய் மட்டுமே தனித்து நின்று ஒரு படையையே எதிர்த்துக் களமாடிய வேங்கைகளால் வீரம் செறிந்த மண் என்றெல்லாம் பெருமை கொண்டது எங்கள் ஊர்.

பருத்தித்துறை ஊராம் என்று பேராசை கொண்ட பவளக்கொடியையும் எங்கள் ஊரில் வாழ வைத்து எங்கள் ஊருக்கு பெயர் சேர்த்துக் கொடுத்தவர் நவாலியூர் சோமசுந்தரப் புலவர். இப்படி எல்லாம் பெருமை கொண்ட ஊரில் நாம் பிறந்ததே ஒரு அதிர்ஷ்டம். இன்று போல் அன்று வீட்டுக்கு வீடு தொலைக்காட்சியும், தொழில் நுட்பமும் வந்திருக்கவில்லை என்பதால் பெரும்பாலானோருக்குப் பொழுது போக்கு வம்பளப்பது மட்டுந்தான். வயதானவர்கள் என்றால் ஊருக்கு மத்தியில் அமைந்திருக்கும் சிவன் கோயிலைக் கும்பிடுவதாகப் பேர் பண்ணிக் கொண்டு பூஜை முடிந்ததுமே தேரடிக்கு முன்னால் இருக்கும் மணற்தரையிலோ வெளிமண்டப வாயிலோடோ அமர்ந்து கொண்டு கதை பேசிக் கொண்டிருப்பார்கள். மழை தூறுகிறது அல்லது கொட்டுகிறது என்றாலும் ஒற்றைக் கையில் குடையைப் பிடித்துக் கொண்டு வந்து எம்பெருமானுக்கு ஒரு வணக்கம் வைத்த பின்னர் அவர்களது அரட்டை அரங்கம் கல்யாண மண்டபத்தில் தொடருவதைக் காணும் போது வயதானவர்கள் என்னதான் பேசுவார்கள் என்பதை அறிய வேண்டும் என்ற ஆவல் என்னுள் இருந்தாலும் அது கை கூடும் நாள் என்றுமே கிட்டவில்லை.

கடல் சூழ்ந்திருக்கும் நகரம், சுண்ணக் கற்பாறைகள் கொண்ட மண் என்பதாலோ என்னவோ பெரும்பாலான வீடுகளில் உவர் தண்ணீர் தான் கிடைக்கும். ஆனால் இறையருளோ என்னமோ, சிவன் கோயில் கிணற்றில் மட்டும் நல்ல தண்ணீர் கிடைப்பதால், பெரும்பாலானவர்கள் குடத்திலோ அல்லது பெரிய பிளாஸ்டிக் கொள்கலன்களிலோ குடிப்பதற்கெனத் தண்ணீர் பிடித்து வைத்துக் கொள்வார்கள்.

இதில் ஊர்க்காவலர்கள் எங்கு வருகிறார்கள்? தலைப்புக்கும் கதைக்கும் என்ன சம்பந்தம் என்று நீங்கள் உங்கள் மண்டையை உருட்டிக் கொண்டிருக்கக் கூடும். மண்ணைக் காத்தவர்களின் பெருமையை ஒரு சிறுகதையுள் அடக்கி விட முடியாது என்பதால் 90களில் நம் ஊர்ப் பெண்களை கண் போன்று காத்தவர்களின் கதையைத் தான் சொல்லப் போகின்றேன். அதில் சிவன் கோயிலடி எப்படிப் பிரசித்தமானது என்பதைச் சொல்லாமல் கதைக்குள் போக முடியாது என்பதால் தான் இத்தனை ஆலாபனையும்.
ஊர்க்காவல்காரர்களுக்கு தத்தமது ஆட்கள் அந்தத் தெருவைத் தாண்டும் வரையிலும் காத்திருப்பதற்கு ஒண்ட இடம் கொடுப்பது இந்தச் சிவன் கோயிலடியும் அந்த தெரு மூடி மடச்சந்தும் தான். ஒவ்வொருவருக்கும் ஒரு வகையிலான பொழுது போக்கு என்றால் அழகான பெண்களைப் பார்ப்பதும் அவர்கள் மசிவார்களா என்று பார்க்க அவர்களுக்கு சம்பளமில்லாக் காவற்காரர்கள் ஆவதும் தான் மீசை முளை விடத் தொடங்கி விட்ட இந்த விடலைக் காளைகளின் பொழுது போக்கு. சரி, இந்தப் பருவப் பெண்களின் பொழுது போக்குத்தான் என்ன?

‘ஓரக்கண்ணால் பார்ப்பதும், பிறகு ஒன்றும் தெரியாதவர்கள் போன்று நடிப்பதும், சம்பளமில்லா காவற்காரர்களை வேலைக்கு அமர்த்திக் கொண்டு நண்பிகளிடையே ஒரு கெத்தாய்த் திரிவதும்தான் இவர்களின் பொழுது போக்கு. இந்தக் காவற்காரர்களுக்கு பெண்மணிகள் வாய் திறந்து எந்த ஆணையும் போடத் தேவையில்லை. அத்தனை தகவல்களையும் திரட்டிக் கொண்டு தாமாகவே சம்பளமில்லாமல் சேவை செய்வது தான் இந்தக் காவற்காரர்களின் சிறப்பு. அம்சத்தில் கொஞ்சம் குறைவான அல்லது யாருக்கும் அடங்காத அல்லி ராணிகளின் பொழுது போக்கு என்ன தெரியுமா? இந்த வம்புகளுக்குக் கை கால் வைத்து பேசுவதும் இந்த அம்மணிகளுக்கு எதிராகக் கதை பேசும் பொறாமைக்கார விரோதிகளை உருவாக்குவதும் தான்.

அழகான பெண்களைப் பெற்ற அப்பாக்களுக்கு மட்டும் தெரியும் , தன் மகள் ஒருவன் துணையிலோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவர்களின் துணையிலோ வீட்டுக்குப் பத்திரமாய் வந்து சேருவாள் என்பது. அந்தக் காலத்தில் அழகான பெண் என்றால் அவளின் சைக்கிளுக்குப் பின்னால் பல பூனைப் படைகள் பாதுகாப்புக்குச் செல்வது வழக்கம். அவர்கள் தங்களுக்குள் அடிபட்டுக் கொள்வார்கள் என்று யாரும் நினைத்தால் அது உங்கள் தப்பு. அவர்களுக்குள் ஒரு சமாதான உடன்படிக்கை பேசிக்கொள்ளாமலேயே கைச்சாத்தாகி நடைமுறையில் இருந்து கொண்டிருக்கும். தமக்குத்தான் மசிய வேண்டும் என்பதற்காக தலை கீழாக நின்று ஏதாவது தகுடுதித்தம் பண்ணிப் பெண்ணைக் கவரப் பார்ப்பார்கள் அவ்வளவு தான். ஒருவருக்கு ஒருவர் இடைஞ்சல் கொடுக்காமல் தமக்கான இடைவெளியைக் கண்ணியமாகவே காப்பாற்றிக் கொள்வார்கள். வெகு அரிதாகவே அடிதடி நடந்திருக்கிறது. அடிதடியில் முடிந்தால், வீட்டுக்கு விசயம் போய் விடும் என்ற அச்சமும் காரணமாய் இருக்கலாம்.

அந்தப் பெண்மணி என்னவெல்லாம் படிக்கிறாள்? எங்கு படிக்கிறாள்? எத்தனை மணிக்கு வகுப்பு தொடங்கும், முடியும் போன்ற விபரங்கள் எல்லாம் பெற்றோருக்குத் தெரியுமோ இல்லையோ இந்தப் பொடியளுக்குத் தெரிந்திருக்கும். தம் வேலை கெட்டு, காதற் பிச்சை கேட்டு, , பின்னாலே அலையும் இந்த ஆண்மக்களை அம்மணிகள் கண்டே கொள்ளமாட்டார்கள். பின்னால் வருவதும், பின்னர் முன்னே சென்று ஒரு வட்டம் போட்டு சைக்கிளைத் திருப்பிக் கொண்டு வந்து ஸ்ரையிலாகக் காலை ஊன்றிய படி, அம்மணிமார் கடந்து செல்லும் அழகை ரசிப்பதும், அப்போதைக்குப் பிரபலமான காதற்பாட்டொன்றை தம்மை எஸ்பிபி மாதிரி உருவகித்துக் கொண்டு பாடுவதுமாய் வீதிக்கொரு காதல் காவியம் கச்சிதமாய் அரங்கேறிக் கொண்டிருக்கும். யாராவது தெரிந்தவர்கள் வருகிறார்கள் என்றால் தலையைக் கவிழ்ந்து கொண்டு சைக்கிள் ஒரு வேகம் பிடித்துப் பறந்து செல்லும். “அப்பாடி போய் விட்டான் பொடியன்” என்று பார்த்தால் அடுத்த சந்திலிருந்து அண்ணையிண்ட சைக்கிள் மீண்டும் முளைத்துக் கொண்டு வரும்.

இந்தக் காவற்காரர்கள் நின்று தம்மை ரசித்துப் பார்க்கிறார்கள் என்றால், அதன் வலி எப்படிப்பட்டது என்பது பெண்களுக்கு மட்டுமே தெரிந்ததொன்று. றோட்டு வேற அப்பத்தான் புதுசாப் போட்டது போல கோணல் மாணலாத் தெரியும், சைக்கிளை ஒழுங்காக மிதிக்கவும் முடியாது, இதயம் வேறு படபட என்று அடித்துக் கொள்ளும். ஒன்றுக்கு மேற்பட்ட சைக்கிள்கள் பக்கத்து பக்கத்திலாக அணி வகுத்து வரும் போது கவனம் தப்பிப் போய், அடிபட்டு அத்தனை சைக்கிள்களும் செருகுப்பட்டு விழுந்து அவமானப்பட்ட சம்பவங்களும் நடந்திருக்கின்றன. அம்மணிகள் கண்டு கொண்டதாய்க் காட்டிக் கொடுக்க மாட்டார்களே தவிர, இவர்களைக் காணவில்லை என்றால் மனம் உள்ளுக்குள் அடித்துக் கொள்ளும். தம் அழகில் கூட ஒருவித சந்தேகம் உள்ளூர வந்து போகும். வடிவில்லாமல் போய் விட்டோமோ, வேறு யாராவது வடிவான பெண்களைக் கொழுக்கி போட்டு விட்டானோ என்றபடி பத்து தரம் பின்னாலேயே திரும்பிப் பார்க்கச் சொல்லும். பொடியனை வீட்டில அம்மா நார் நாராய்க் கிழித்து தோரணமாய்த் தொங்க விட்டிருப்பா. “வீட்டில ஒரு துரும்பு எடுத்துப் போடாத ராசா, சைக்கிளை எடுத்துக் கொண்டு ரோட்டு ரோட்டா பொட்டைகளுக்கு பின்னால திரி” எண்டு அம்மா ஒரு கண்டபடி திட்டிக் கழுவிப்போட்டதைக் கூட ஒரு பொருட்டாகவே எடுத்து கொண்டிக்க மாட்டார்கள். பொறுத்துப் போன அம்மா, இறுதி ஆயுதமாய் வில்லன் அப்பாவிடம் வத்தி வைத்திருப்பார்.

‘அப்பா வயசுக் கோளாறு எண்டதைப் பற்றிக் கவலைப்படாமல் தம்பிக்கு நல்ல பாடம் படிப்பிக்க நினைச்சிருப்பார், நினைக்க மட்டும் தானே முடியும். அல்லது நல்ல சூடு குடுத்திருப்பார். தம்பி என்ன திருகுதாளம் செய்தாவது வெளிக்கிடுவார் எண்டு தெரிஞ்சே அண்டைக்கு அப்பா அத்தனை வேலையையும் விட்டுப் போட்டு, “எங்க வெளிக்கிட்டுப் பார் ராசா இண்டைக்கு” எண்ட ரீதியில் கங்கணம் கட்டிக் கொண்டு பொடியனைக் காவல் காப்பார். அப்பாவும் இந்த வயசைத் தாண்டி வந்தவர் என்றதால தம்பியிண்ட மூளை எப்பிடியெல்லாம் குறுக்கால போகும் எண்டதும் நல்லாத் தெரியும் தானே?

தம்பிக்கு உள்ள துடிச்சுக் கொண்டு இருக்கும், ஐயோ கிளாசுக்கு வெளிக்கிட்டிருப்பாளே? இப்ப தெரு மூடி மடத்தைத் தாண்டியிருப்பாளே? என்னைக் காணேல்லை எண்டு தேடியிருப்பாளோ? அப்பர் வேற கடி நாய் மாதிரிக் காவல் இருக்கிறாரே? எண்டு தம்பி உள்ளுக்குள்ள அப்பாவுக்கு ஆயிரம் நாமம் சொல்லி அர்ச்சனை செய்து கொண்டிருப்பார். புத்தகத்தில இருக்கிறதுகள் எதுவும் தம்பிக்கு ஏறாது, ஆனால் நித்திரையில் இருந்து எழுப்பிக் கேட்டால் கூட அம்மணியின்ர அத்தனை விபரத்தையும் சொல்லுவார். என்ன சட்டை போட்டவா? என்ன தலைக்குக் கட்டியிருந்தவா? யாரோட, எங்க, எப்ப வந்தவா? எப்பிடிச் சிரிச்சவா? எப்பிடி தலையைச் சரிச்சு தன்னைப் பார்த்தவா? என்ற விசயம் எல்லாம் அவருக்கு அத்துப்படியாய் இருக்கும்.

அம்மணி வேற, பின்னால வர்றதை எங்க காணேல்லயே எண்டு திரும்பிப் பார்த்துப் பார்த்து அலுத்துப் போயிருப்பா. “அவவுக்கும் காதல் வந்துட்டுது” என்று அவசரக்கணக்குப் போட்டுப் போடாதேங்கோ. நித்தம் வர்றதை, ஒரு நாளைக்கு காணாட்டி வாற ஒரு சின்னத்தவிப்புத்தான். அடுத்த நாள் அப்பாடி என்று அப்பரைச் சுத்திப் போட்டு, தம்பி அவசரமாய் ஓடி வந்தால் இதுகள் ஏறெடுத்துப் பார்க்குங்கள் எண்டு நினைக்கிறியளே. அதுதான் இல்லை, பின்னால காவற்காரன் வர்றான் எண்டது தெரிஞ்சிட்டுது எண்டால், அம்மணி ஏறெடுத்தும் பார்க்க மாட்டா. தன்ர பாட்டில நளினமாக் கதைப்பா, சிரிப்பா, இவரைக் கிஞ்சித்துக்கும் மதிக்க மாட்டா. தம்பியிண்ட முகத்தில ஆயிரம் ஏக்கங்கள், பாவங்கள் எல்லாம் கொட்டிக் கொண்டு இருக்கும், அவா பார்த்தா தானே? பாலசந்தர் பார்த்திருந்தாலாவது தன்ர அடுத்த படக் கதாநாயகனாய் ஒப்பந்தம் செய்திருப்பார். அவரும் பெரிய கதாநாயகன் ஆகியிருப்பார்.

சரி, வீட்டில இப்படியான காவற்படைகள் பின்னால வருகுது எண்டு அம்மணி வீட்டில முறைப்பாடு செய்திருப்பா என்று நினைச்சால் அதுவும் பிழை. தம்பிப் பயலுகள் சும்மா வட்டம் போடுறதைத் தவிர பெரிய தொல்லை குடுக்காத வரையில அம்மணி வீட்டில ஒரு மூச்சும் விட மாட்டா. காவற்காரர் எவ்வளவு உதவியாய் இருக்கிறார் எண்டது அவவுக்கு மட்டும் தானே தெரியும்.

இருட்டினாலும் எந்தப் பயமும் இல்லை. வீடு வரைக்கும் துணைக்கு வருவார். வீட்டுக் கதவைத் திறந்து உள்ளுக்குள்ள போற வரைக்கும் பார்த்துக் கொண்டிருந்து போட்டுத்தான் தன்ர வீட்டுக்குப் போவார். பசி, தாகம், தூக்கம் என்று எதுவும் பார்க்காமல் இவவுக்காகக் காத்திருப்பார். வகுப்பு முடிய நேரமானாலும் வாத்தியைத் திட்டிக் கொண்டு மரத்தடியில குந்தியிருப்பார். சைக்கிளுக்குக் காத்து அடிக்கோணும் எண்டாக் கூட சொல்லாமலே அடிச்சு விடுவார். காத்துப் போட்டுது எண்டு உருட்டிக் கொண்டு நடந்தால் இரண்டடிக்குப் பின்னால அவரும் உருட்டிக் கொண்டு வருவார். வீட்டில ஒரு விறகு தூக்கிப் போட மாட்டார், ஆனா, இந்தச் சைக்கிளைத் தூக்கிக் கொண்டு வரவும் அவர் ரெடி, ஆனா அவாவிட்டக் கேட்குறதுக்கு அந்த மண்ணாக்கட்டி தைரியம் மட்டும் அந்த நேரத்துக்கு வராமல் எங்காவது ஒளிச்சுக் கொண்டு போடும்.

பின்னால, முன்னால, குறுக்கால எண்டு ஓடி ஓடி இந்தக் காவற்காரர் பாதையைக் கிளியர் பண்ணிக் கொண்டு போவார். இப்பிடித்தான் ஒரு நாள் நாய் ஒண்டு ஒரு ஓரமா சிவனே எண்டு தன்ர பாட்டில படுத்துக் கிடந்தது. இவர் அம்மணிக்கு முழு ரோட்டும் வேணும் எண்டது போல நாயைத் துரத்துறதுக்கு பெடல்ல இருந்து காலை எடுத்து நாயைத் தட்டி மிதிச்சு “சூ.... ஓடு” என்றார். அது வாலைச் சுருட்டிக் கொண்டு எழும்பி ஓடும் எண்டு தம்பி நினைச்சிருப்பார். அப்பத் தான் ரோட்டில போட்ட குப்பையைத் திண்டு கால் வயிறு நிறைச்சுப் போட்டு, அரைப் பசியோட நித்திரை கொள்ளுவம் எண்டு கண்ணை மூடின நாய்க்குக் கோபம் வருமோ இல்லையோ? அது உள்ள ஊர்க்கொதியை எல்லாம் சேர்த்து வைச்சு, “வவ்” எண்டு பாய்ஞ்சு தம்பியிண்ட காலைக் கடிக்கப்போக, அவர் அந்தக் காலைத் தூக்கி பாரில வைச்சுக் கொண்டு மற்றக் காலால சைக்கிளை மிதிச்சு ஓடப் பார்த்தார்.

‘போதாததுக்கு இன்னும் ரெண்டு நாய்க்கும் விசயம் தெரிஞ்சு, அவையளும் கடுப்பாகி இவரைச் சேர்த்துத் துரத்தத் தொடங்க, மானம் என்ன மானம்? உயிர் தான் முக்கியம் என்று தம்பி ஓட்டம் எடுத்தார். ஹீரோவாத் திரிஞ்ச தம்பியிண்ட தன்மானத்தை ஒரு நிமிசத்தில காத்தில பறக்க விட்டுட்டுதுகள் இந்த தெருநாய்கள். அம்மணிமாருக்கு கொஞ்சம் கலக்கம் தான் எண்டாலும் அதுக்குப்பிறகு இவரைக் காணுற போதெல்லாம் கொடுப்புக்குள்ள சிரிச்சுச் சந்தோஷப்பட்டுக் கொண்டிருப்பினம்.

அடுத்த நாள் தம்பி ரோந்துக்கு வரவேயில்லை, அவருக்கும் மானம் ரோசம் எல்லாம் கொஞ்சமாவது இருக்கும் தானே? சரி இந்தக் காவற்காரருக்கான பதவி எப்படித்தான் கிடைக்கும்?

காவற்காரர் என்ற பதவிக்கு யாரெல்லாம் தகுதியானவர்கள் என்று பார்த்தால் நிறையப் பேர் தேறவே மாட்டினம். வீட்டுக்குப் பயந்தவை, தாங்கள் பார்க்க நன்றாகவே இல்லை என்ற தாழ்வுணர்ச்சியுடன் திரிபவர்கள், மெத்தப் படித்தவர்கள் என்ற ஆட்களுக்கு ஆசை இருந்தாலும் தைரியம் மட்டும் இருக்காது. மெத்தப் படிக்கிற பொடியளுக்கு ஈசியா மடியிறதுக்கு வாய்ப்பு இருக்குது தான். ஆனால் அவையிண்ட மனசில ஆசை இருந்தாலும் கௌரவம் தடுக்கும், ஆசைகளை மனசில போட்டுப் பூட்டிக் கொண்டு, கண்களால் பேசும் காதல் உனக்கு மட்டுமாவது புரிகிறதா என்று மனதுக்குள் மட்டும் கீதம் பாடிக்கொண்டு, இருப்பினம். இவையள் A/L லில நல்ல புள்ளி எடுத்து பல்கலைக்கழகம் கிடைச்சாப்பிறகுதான் தங்கட மனசைத் திறக்க வேணும் என்ற நல்ல நேரத்துக்காய் காத்திருப்பவர்கள். அலை ஓய்ஞ்சு கடலில குளிச்ச கதையாய், காதலிக்கிறதுக்கு நேர காலம் பார்த்துக் காத்திருந்தால் என்ன பயன்? அதற்குள் பச்சைக்கிளிகள் பறந்து ஆளுக்கொரு திக்காய்ப் போயிருந்திருப்பார்கள்.

படிப்பு ஏறியும் ஏறாமல் இருக்கும் இரண்டாம் கெட்டானுகளுக்குத் தான் தைரியம் தலை வரைக்கும் இருக்கும். தம்பி ஒருவருக்கு அம்மணி ஒருவரை நல்லாப் பிடிச்சுப்போட்டுது எண்டால், அதைக் காட்டுறதுக்கு தம்பிக்கு ஒரு வழியும் தெரியாது, முதல்ல ஒரு நூல் விட்டுப் பாக்குறதுக்குத் தான் பின்னால அலையத் தொடங்குவினம். அதுவும் தம்பிக்குத் தனிய தொடங்கத் தைரியம் வராது. அவையள் தன்னைப் போல இருக்கிற நாலு பேரைக் கூட்டிக் கொண்டு தான் அம்மணிக்கு காதல் அம்பு விட்டுப் பார்ப்பினம். அம்மணிமாரும் தனியத் திரியிற ஆட்கள் இல்லைத் தானே? நாலைஞ்சு நாட்களுக்குப் பின்னதான ரோந்தின் பின்னர் தான், சரி இந்த குறூப்பில தான் யாரையோ சுத்தினம் எண்டது அம்மணிமாருக்குத் தெரிய வரும். அந்த குறூப்பில இருக்கிற அத்தனை பேருக்கும் ஒரு படபடப்பு கட்டாயம் வந்து போகும். இவங்கள் சுத்துறது நானாய் இருக்குமோ? இருக்காது, என்னை விட எங்கட குறூப்பிலயே சுமதி வடிவு, அவளாய்த்தான் இருக்கும் என்று பெண்களைத் தமக்குள்ளேயே ஒரு சுய அலசலைச் செய்ய வைத்து விடுவார்கள் இந்த ரோமியோ காவற்காரர்கள்.

தம்முள் யாரைச் சுற்றுகிறார்கள் என்ற கேள்வி பெண்களுக்கு மட்டும் தலையிடியைத் தராது. பின்னால் வருபவர்களில் யாருக்கு காதல் அம்பு தைத்திருக்கிறது என்பதுமே உடனடியாய் தெரிய வராது. முதற் கட்டமாய் சிவன் கோயிலில் தண்ணீர் எடுக்க வருவது போல் நின்று கொண்டு, இந்த அம்மணிகளின் சைக்கிள் குறூப் தாண்டிச் செல்லும் போது ஒருவனின் பெயரைச் சொல்லிக் காக்கா வலிப்பு வந்தவர்கள் போல் கத்துவார்கள். பெண்கள் அப்போது தான் அந்த ரோமியோ யார் என்பதைக் கண்டு பிடிப்பார்கள். யார் பெண் என்பது எப்போது தெரிய வரும் தெரியுமா? நண்பர் குழாம் இப்படிக் கத்திக் கத்திக் களைத்துப் போய் தூது விட ஆள் தேடுவார்கள். ஒன்று, ஆள் மூலம் தூது வரும். அல்லது எங்காவது ஆளில்லா மூலையில் வைத்து ஒரு காதற்கடிதம் என்று கண்டபடி வரைந்ததை நீட்டி விட்டு ஓடும் போதோ அல்லது சைக்கிள் ஹாண்டிலில் அல்லது பின்னால் இருக்கும் புத்தக இடுக்கில் ஒரு பேப்பர் துண்டைக் காணும் போதோ தான் அம்மணிக்கு “தானே தான் நாயகி” என்பது தெரிய வரும்.

‘அம்மணி பதில் சொல்லவே மாட்டா. பின்னால் திரிஞ்சு களைச்சு, அப்பப்ப தேவதாஸ் போஸ் குடுத்து, அதுவும் வேலைக்கு ஆகாமல் போக, தாடி கொஞ்சம் வளர்க்கத் தொடங்குவினம். கையில காசு இருக்கோ இல்லையோ அடுத்த வேளைச் சாப்பாட்டுக்கு வழி இருக்கோ இல்லையோ காதலி இல்லாட்டி மதிப்பு இல்லை என்பதை நன்றாகத் தெரிந்தவர்கள். உசாரான பெண்கள் தப்பித்துக் கொண்டு விடுவார்கள். பருவக் காதல் கை கூடிய கதைகள் மிக அரிதாகவே காணக் கூடியதாய் இருந்தது வீதிக்கு வீதி இது தினசரிக்கதையாய் இருந்தாலும், இருபக்கமும் மனமொப்பிக் காதலித்தவர்களின் எண்ணிக்கையைக் கை விரல் விட்டு எண்ணலாம். பெண்களில் பாதிப் பேருக்கு படிப்பு என்ற தடையோ அல்லது குடும்ப கௌரவம் என்ற தடையோ இந்த காதலை கொஞ்சம் வலியுடன் வெறுமனே கடந்து செல்ல உதவியிருக்கலாம்.

கண்ணில் படாதது ஒன்று கருத்தை விட்டும் மறைந்து போகும் என்பார்கள், ஆளுக்கொரு திசையில் பிரிந்த பின் அத்தனையும் வெறும் கவர்ச்சி என்பது புரிந்து போயிருக்கலாம். கொஞ்சம் இளகிய பெண்கள், காதலில் விழுந்து இன்று வரையில் கஷ்டப்படுபவர்களும் உண்டு. காதலிப்பதைச் சொல்லாமல் ஒரு தலைக்காதலாய் நினைவுகளைப் பூட்டிக் கொண்டு பூக்கத்துடிக்கும் காதலை அரும்பிலேயே கிள்ளி விட்டுக் கடந்து சென்றவர்களும் உண்டு. ஆனாலும் அந்தி மாலை என்ன, அதிகாலை என்ன, கும்மிருட்டு என்ன, கொட்டும் மழை என்ன, பெற்றவர்கள் பெண்களைப் பற்றிக் கவலைப்படாத போதும் தம் படிப்பு மறந்து தம் வேலை மறந்து இதையே ஒரு தவமாய்ச் செய்த அத்தனை காவற்காரர்களுக்கும் பெண்ணினமே கடமைப் பட்டிருக்கிறது. பெண்கள் குழாமுக்கே காவலர்களாய் சுற்றி வந்தவர்கள் இன்று நாட்டுக்கொரு திக்காய் பிரிந்து சென்று விட்டு அவரவர் குடும்பங்களில் பொறுப்பான கணவன்மாராய் வாழ்ந்து கொண்டிருக்கக் கூடும். ஆனாலும் அவர்களின் அன்றைய நாள் காவலுக்கான கூலி மட்டும் செலுத்தப்படாமல் இன்றும் பெண்களின் கணக்கில் நிலுவையிலேயே இருந்து கொண்டிருக்கின்றது. நன்றி காவற்காரர்களே!!!!!

# பிறந்த நாள்

- மெல்போர்ன் அரவிந்த்

எங்கள் வீட்டுப் பாப்பாவுக்கு,
இன்று தானே பிறந்தநாள்!

இரண்டு அகவை முடிந்து,
மூன்று வயதில் நுழைகிறாள்!

அப்பா வாங்கித் தந்தார்,
அருமையான மிதிவண்டி!

அம்மா வாங்கித் தந்தார்,
அழகான கொலுசு!

மாமா வாங்கித் தந்தார்,
மஞ்சள் நிறப் பட்டாடை!

தாத்தா வங்கித் தந்தார்,
தங்கத்திலே மோதிரம்!

பாட்டி வாங்கித் தந்தார்,
பளபளக்கும் காதணி!

நானும் என்ன வாங்கலாம்,
நீங்கள் கொஞ்சம் சொல்லுங்கள்?



# குழந்தைகளை உயரத்தில் வைத்துப் பார்க்கும் நிலை வரவேண்டும் !

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண் .... அவுஸ்திரேலியா

**இல்லறத்தின் பேரின்பம் குழந்தைச் செல்வங்களே. குழந்தை இல்லா வீட்டில் குதூகலம் என்பது காணாமல் போய்விடும்.ஆணும் பெண்ணும் இணையும் வாழ்க்கையில் ஆனந்தப் பரிசாக வந்தமை வது குழந்தைகளே. குழந்தை பிறப்பதே வாழ்க்கையில் பெருவர மாகும். அந்தக் குழந்தைகளை எப்படிப் பார்க்கிறோம் ? அந்தக் குழந் தைகளை எப்படி வளர்க்கிறோம் ? என்பதுதான் குழந்தையின் வாழ்க் கையிலே மிகவும் முக்கியமான நிலையாகும்.**

**குழந்தை என்னும் சொல் - பிறந்த குழந்தையினைக் குறிப்பதா கவே யாவரும் கருதுகிறோம்.ஆனால் " குழந்தைத் தொழிலாளி " என்னும் பதம் சற்று வித்தியாசமானதாய் குழந்தைகளைப் பார்க்க வைக்கிறது. ஐந்து வயது தொடக்கம் பதினான்கு வயதுவரை உள்ள வர்கள் குழந்தைத் தொழிலாளர் என்னும் வகைக்குள் சிக்கித் தவிக் கிறார்கள். பிறந்த பிள்ளையினைக் குழந்தை என்பதுதான் பொது வான நியதி. ஆனால் 5 வயது தொடக்கம் 14 வயது வரைக்குள் இருக் கின்றவர்களும் குழந்தைத் தனம் மிக்கவராகையால் அவர்களும் " குழந்தை " என்னும் வட்டத்துக்குள் வந்து - தொழிலினைச் செய்யும் நிலையில் " குழந்தைத் தொழிலாளர் " என்று அழைக்கும் பொதுமை க்குள் வந்து நிற்பதை உலகமெங்கணும் காணுகிறோம். தொழிலாளர் எனும் பொழுது வயது வந்தவர்களே அங்கு வந்து நிற்பார்கள் என்பதுதான் நியாயமானது. ஆனால் இங்கு குழந்தைகளே தொழி லாளர் என்னும் நிலைக்குள் வந்து நிற்பதுதான் உலகத்தின் மாபெரும் கவலையாய், பிரச்சினையாய், முகிழ்த்து வந்து நிற்கிறது.**

**பள்ளிக்கூடம் செல்ல வேண்டியவர்கள் வேலைத்தலத்தில் நிற்கிறார்கள். பாடப்புத்தகங்கள் எடுக்க வேண்டிய கைகளில் கல்லையும், மண்ணையும், கடப் பாரையையும், கடினமான பொருட்களையும், கழிவுகளையும், ஆபத்தான பொருட்களையும், பிஞ்சுக்கரங்களால் தூக்கியும் சுமந்தும் நிற்கிறார்கள். "இளமையிற் கல்வி சிலையிலெழுத்து " என்பார்கள், இளமையோ கல்லுடைப் பதிலும், கல்லைச் சுமப்பதிலும் கழிகிறது ! பிச்சை எடுப்பதும் , எச்சியிலை பொறுக்குவதும். பிஞ்சுக்கரங்களுக்கு ஒப்படைக்கப் படுகிறது ! புத்தகங்களை சுமக்கவேண்டியவர்கள் தூக்கமுடியாச் சுமைகளை - கண்ணீரில் நனைந்தபடி சுமக்கும் நிலையில் காணப்படுகிறார்கள் !**

**குழந்தைகளைக் குழந்தைகளாகப் பார்க்காமல், குழந்தைகளை குழந்தைகளாக நடத்தாமல், அவர்களையும் ஒரு தொழிளாளர் என்று எண்ணி பல நாடுகள் பிஞ்சுக்கரங்களில் அஞ்சாமல் பல தொழிற்கரு விகளை ஒப்படைத்து நிற்பதையும் காணமுடிகிறது.விளையாட்டுப் பொருட்களும், புத்தகங்களும் இருக்க வேண்டிய கைகளில் - அவர்க ளுக்கு ஒவ்வாதவற்றைக் கைகளில் கொடுத்து வேலைவாங்கி - குழந்தைகளின் உலகினைச் சிதைக்க வைக்கின்ற கொடுஞ்செயல் அரங்கேறிக் கொண்டிருப்பது பெரும் வேதனையாகவே இருக்கி றது.உலகின் பெரும்பாலான நாடுகள் குழந்தைகளை வேலையில் ஈடுபடுத்துவதைத் தடை செய்த போதும் - இன்னும் இந்தக் கொடிய நிலை மாறியதாகவே தெரியவில்லை.**

**எரிட்டிரியா நாட்டில் ஒன்பது , பத்தாம் வகுப்புகளில் படிப்பவர்கள் கட்டாயம் வேலைசெய்யவும், இராணுவப் பயிற்சிக்கும் நிர்ப்பந்திக்கப் படுகிறார்கள். சோமாலியாவில் ஐந்துவயது முதல் பதினான்கு வயது க்குட்பட்டவர்கள் பலர் குழந்தைத் தொழிலாளர்களாக அமர்த்தப் பட்டிருக்கிறார்கள்.இப்படி அமர்த்தப் பட்டவர்களோ ஆயிரக்கணக் கெனலாம்.வீதிகளில் பிச்சை எடுப்பதிலிருந்து சுரங்கத் தொழில்வரை குழந்தைகள் தொழிலாளராக்கப் பட்டிருக்கிறார்கள்.இங்கு குழந்தை களுக்கென்று முறையான கல்விமுறை ஏற்படுத்தப் படவில்லை என்பதும் நோக்கத்தக்கது.கொங்கோ நாட்டில் - இங்கிருக்கும் தேசிய புரட்சி ஆயுதக் குழுக்களால் குழந்தைகள் அடிமைகளாக நடத்தப் பட்டு அவர்களின் சுயநலத்துக்காக அல்லல்பட்டுக் கொண்டும் இருக்கிறார்கள் என்பது மனமேற்கா வருத்தமாய் தொடர்கிறது. சூடானும் குழந்தைத் தொழிலாளர்களை உருவாக்கியே நிற்கிறது. பள்ளிசெல்லும் குழந்தைகள் மிகவும் குறைந்த அளவிலேயே காணப்படுகிறார்கள்.**

‘மியன்மார் என்றாலே பயமே யாவர் மனதிலும் எழுந்துவிடும்.அந்த நாட்டில் காணப்படும் வறுமையால் மில்லியன் கணக்கில் குழந்தைத் தொழிலாளர் பெருகி வருகிறார்கள்.


இந்தியாவில் குழந்தைத் தொழிலாளர் நிலை என்பது மிகவும் துன்பகரமாகவே காணப்படுகிறது. சட்டங்கள் பல போட்டும் அங்கு நிலைமை மாறுவதாகவே தெரியவில்லை.குழந்தைத் தொழிலாளர் முறையென்பது பல இடங்களில் கொத்தடிமை முறையாகவே இருக்கிறது.இடம்பெயரும் தொழிலாளர்கள் மத்தியில் - குழந்தைகள் கொத்தடிமை என்பது மிகவும் அதிகமாகவே காணப்படுகிறது.அதே நேரம் வட மாநிலங்களிலிருந்து கட்டட வேலைக்கென்று அழைத்து வரப்படும் குழந்தைகளின் வாழ்வு நிலையோ மிகவும் மோசமாகவே காணப்படுகிறது.இடைத்தரகரால் இந்தக் குழந்தைகள் தொழிலாளர் ஆக்கப்படும் நிலை கட்டாயமாகத் தடுக்கப்படவேண்டும். தரகர்களின் செயலினால் குழந்தைகளின் கொத்தடிமை முறை வளர்கிறது என்று தான் சொல்லவேண்டும்.

குழந்தைகள் கூலிக்கு வேலை பார்த்தாலும், குடும்பத்தாருடன் வேலை செய்தாலும் - அவைகள் ; குழந்தைகளின் வளர்ச்சிக்கும் , கல்விக்கும், இடை யூறாக அமையும் நிலையில்த்தான் " குழந்தைத் தொழிலாளி " உருவெடுக்கிறான். இப்படியானவர்களைத்தான் " குழந்தைத் தொழிலாளி " என்று பெயர் சூட்டி நிற்கிறோம். அதுமட்டுமன்றி - குறைவான கூலிக்கு நீண்டநேரம் வேலை செய்வது, உடல் ஆரோக்கியம், மன ஆரோக்கியம் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு பாதிப்பினைத் தரும் சூழலில் வேலை செய்வது , குடும்பங்களைவிட்டுப் பிரிந்து வேலை செய்வது, பள்ளிப் படிப்பினை இழந்து வேலை செய்வது - அத்தனையும் யாருக்கு அமைந்திருக் கிறதோ , அங்கேதான் " குழந்தைத் தொழிலாளி " வந்து நிற்கிறான்.

நேரடியாகவே குழந்தைத் தொழிலாளர் முறை இருப்பதுபோல் மறைமுகக் குழந்தைத் தொழிலாளர் முறையும் இருக்கிறது. அரசாங்கத்தின் சட்டங்கள் பாயாத இடங்களில் - குழந்தைகளை வேலைகளுக்கு அமர்த்தி , அவர்களின் உடல்நலத்துக்குத் தீங்கு விளைவிக்கும் வகைக்கு உள்ளாக்குவதுதான் மறை முக நிலை எனலாம்.இவற்றைவிட இன்னுமொரு நிலை இருக்கிறது. அதுதான் கொடூரமான , பயங்கரமான கொத்தடிமை முறை எனலாம். பெற்றவர்கள் பெற்ற கடனுக்காய் பிள்ளைகளைக் கொத்தடிமை யாக்கி வேலை வாங்கும் முறைமை என்பது கொடுமையிலும் பெருங்கொடுமையாய் இந்தியாவில் பல மாநிலங்களில் காணமுடிகிறது.

நாட்டில் ஏற்படும் கலவரங்கள். இன மோதல்கள். இவற்றால் பெற்றோரை இழக்கும் குழந்தைகள். பெற்றவர்களால் கைவிடப்படும் குழந்தைகள். யாவரும் குழந்தைத் தொழிலாளராக்கப்படுகிறார்கள். பல நாடுகளில் குழந்தைகளை விற்பதும் இன்றும் நடைபெற்றுக் கொண்டே இருக்கிறது. தரகர்கர்கள் என்னும் பெயரில் உருவாகின்ற துரோகிகள் - ஈவு இரக்கமின்றி குழந்தைகளை பணத்துக்காக எதுவும் செய்திடத் துணிந்து தங்களின் இலாபத்தைக் கணக்குப் பார்த்தபடி இருக்கிறார்கள்.

குழந்தைத் தொழிலாளர்களை இல்லாமல் செய்வதற்கு சட்டங்கள் போடுகிறார்கள். சர்வதேச அளவில் அமைப்புகள் நிறுவுகிறார்கள். இவ்வாறு செய்யும் நிலை தோன்றியதால் - குழந்தைகளுக்குக் கட்டாயமாகக் கல்வியினை ஊட்டவேண்டும்.பள்ளிக்கூடம் செல்லா நிலையில் இருக்கும் பிள்ளைகளைப் பள்ளிக்கூடம் செல்லச் செய்ய வேண்டும். குழந்தைத் தொழிலாளர்களைப் பணிக்கு அமர்த்தும் இட ங்களைக் கண்டறிந்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். என்னும் ஒரு எழுச்சி ஏற்பட்டிருக்கிறது. ஆனால் இன்னும் குழந்தைத் தொழி லாளர் என்னும் நிலைமட்டும் நாடுகளை விட்டு முற்றிலும் அகலு வதாய் தெரியவில்லை.



‘சட்டம் போடுவதோ , திட்டம் போடுவதோ முக்கியம் அல்ல. சட்டத்தையும் திட்டத்தையும் மனதார உணரவேண்டும்.குழந்தைத் தொழிலாளர் என்னும் சொல்லை அனைவரும் மறக்கவேண்டும். அப்படி ஒன்று இருக்கிறது என்னும் எண்ணமே மனங்களில் எழுந்துவிடக் கூடாது.பிள்ளைச் செல்வம் பெருஞ்செல்வம். அந்தச் செல்வத்தை அழவைத்து பார்ப்பதில் ஆனந்தம் காண்பது முறையா ? அவர்களை வாட்டி எடுத்து வேலைவாங்குவது மனித நீதிக்குத்தான் அடுக்குமா? குழந்தைத் தொழிலாளர் மூலம் கிடைக்கும் இலாபத் தைச் சுவைப்பதில் இன்பம் காணுவார் இரக்கத்தை இறக்கச் செய் கிறார்கள். குழந்தையும் தெய்வமும் ஒன்றுஎன்கிறோம்.தெய்வத்தைக் கோவிலில் வைத்துப் பூசிக்கின்றோம். குழந்தைகளை மட்டும் ஏன் பூசிக்க மறுக்கின்றோம் ? பூசிக்கத்தான் வேண்டாம் ! நேசிக்கலாம் அல்லவா ?

உலகிலுள்ள அனைவரும் சிந்திக்க வேண்டும். வேலை செய்வதற்கு வயது வேண்டும். உடலில் உறுதிவரவேண்டும். பிஞ்சுக்கரங்களை முறிப்பது முறையா ? வளரவேண்டிய இளந்தளிர்கள். வாழ்வினை என்னவென்று அறியாத பருவத்திலே இருப்பவர்கள்.அவர்களுக்கு நாங்கள் ஆறுதலாய் இருக்க வேண்டும். அரவணைப்பாய் இருக்க வேண்டும். விழிப்புணர்வு பெறுவோம் ! குழந்தைகளை மீட்போம் ! குழந்தைகள் உலகம் குதூகல உலகம் ! குழந்தைத் தொழிலாளர் என்பதே நாட்டுக்கு அவமானமாகும் !

பள்ளி சென்று படிக்க நினைக்கும் குழந்தை பத்திரிகை போடுகிறது. படித்தும் பரீட்சைக்குக் காசின்றி தேனீர் கடைகளில் கோப்பைகளை கழுவும் நிலை ஏற்படுகிறது. கணிதத்தைக் கற்றிட எண்ணிய பிள்ளை கல்லுடைக்க கல்சுமக்கச் செல்கிறது.ராக்கெட்டில் சென்று விண்ணியலைக் காண விளையும் பிள்ளை தெரிவில் விளையா ட்டுப் பொம்மையை விற்கிறது. சுண்டல் விற்று நிற்கிறது. விஞ்ஞானியாய், மருத்துவனாய், பொறியாளனாய், வரவேண்டிய குழந்தைகள் வீதியிலே திரிவதா ? விறகினைச் சுமப்பதா? மாற்றம் வரவேண்டும் ! குழந்தைகளை உயரத்தில் வைத்துப் பார்க்கும் நிலை வரவேண்டும் ! அப்படி வரும் நாள் அகிலத்துக்கு ஆனந்தமான நாளாகும் !



# இறுதி யாத்திரை

**- சியாமளா யோகேஸ்வரன்**

மதிய உணவு இடைவேளை என்பதால் சாப்பாட்டு அறை ஊழியர்களால் நிறைந்திருந்தது. அது மட்டுமல்லாமல் பல்வேறு நாட்டுக் கலாசாரத்தை பிரதிபலிக்கக் கூடிய உணவு வகைகளின் வாசனை கேட்காமலேயே மூக்குக்குள் நுழைந்து பசி உணர்வை வேறு தட்டி எழுப்பிக் கொண்டிருந்தது. எட்டு மணி நேரமும் நின்று கொண்டிருக்கும் சுதனின் கால்களுக்கு ஓய்வு கிடைப்பதே இந்த இடைவேளைகளில் தான். நான்கு மணி நேரம் கடந்து விட்டதுமே, பாரமான சப்பாத்துக்களுடனான கால்கள் ஓய்வு கேட்டுக் கெஞ்சத் தொடங்கி விடும். எப்போது வரும் இடைவேளை என்று கண்கள் மட்டும் ஓயாமல் மணிக்கூட்டையே சுற்றி வரும். இடைவேளை என்றதும் சாப்பாட்டுப் பையைத் தூக்கிக் கொண்டு அரக்கப் பறக்க ஓடி வந்து கதிரையில் அமர்ந்து, கால்களை நீட்டிக்கொண்ட பின் தான் அப்பாடி என்றிருக்கும். வித விதமான உணவு வகைகள் சூடாகப் பரவும் மணத்தை ஆழ நுகர்ந்தபடியே, தான் கட்டி வந்த சோற்றுப்பார்சலையோ, ஜாம் தடவப்பப்பட்ட பாண் துண்டுகளையோ சாப்பிட்டு முடித்து விடுவான் சுதன். அன்னையின் கைப்பக்குவத்தின் சுவைக்கு அடிமையாகிப் பழக்கப்பட்டு விட்ட நாவை அடக்குவது என்பது பெரும் பாடாய்த்தான் இருந்தது. மீதி உணவு நேரத்தில், தொலைபேசியினூடு அன்னையின் நலன்களை விசாரித்துக் கொள்வான். காலைத் தேநீரைக் குடித்தபடியே மகனைப் பற்றி விசாரித்து விட்டு ஊர்ப்புதினங்களையும் பகிர்ந்து கொள்வார் தாயார்.

இன்றோ சுற்றி வர என்ன நடக்கின்றது என்பதை உணர்ந்து கொள்ள விரும்பாதவனாய் சாப்பாட்டு மேசையில் கவிழ்ந்து படுத்திருந்தான் சுதன். எதற்கும் இருக்கட்டும் என்று கட்டி வந்திருந்த உணவு அவனுக்கு முன்னால் சீந்தப்படாமலேயே காத்திருந்தது. அன்னைக்கு உடல் நலக் குறைவு என்று கேள்விப்பட்டதில் இருந்து அவன் மிகவும் துவண்டு போயிருந்தான். அதுவும் கடந்த ஒரு வார காலமாக அன்னையின் உடல் நிலையில் எந்த முன்னேற்றமும் இன்றிப் போகவே, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார் தாயார். கையில் இருந்த தொலைபேசி உயிர்த்தெழுந்து எந்தக் கெட்ட செய்தியையும் சொல்லி விடக் கூடாது என்பது போலவே அதை இறுகப் பற்றியிருந்தான் சுதன்.

சுதனுக்கு ஐந்து வயதிருக்கும் போது, சுற்றிவளைப்பின் போது பிடித்து செல்லப்பட்ட தந்தையை உயிரற்ற உடலாகத் தான் வீட்டுக்குக் கொண்டு வந்து சேர்த்திருந்தார்கள். அன்னையுடனும் தந்தையுடனும் உடன் பிறந்தவர்கள் இவர்களில் அக்கறை கொண்டிருந்தாலும் முழுப்பொறுப்பையும் சுமப்பதற்குத் தயாராக இருக்கவில்லை. கணவனை இழந்த துயரை விட நிலைமையின் யதார்த்தம் தான் சுதனின் தாயுள் அதிக வலியை ஏற்படுத்தியது. வீட்டுப்பொறுப்பைத் தனியாகவே சுமப்பேன் என்ற வைராக்கியத்துடன் சின்னச் சாப்பாட்டுக் கடையொன்றை திறந்து, தன்னந்தனியே குடும்பப்பாரத்தைத் தாங்கத் தொடங்கினார்.

ஒண்டியாகவே கடையை நடாத்தி வந்த தாய்க்குச் சுதன் தான் அவ்வப்போது கை கொடுக்க வேண்டியிருந்தது. அத்துடன் வகுப்புகளுக்கு பணம் செலுத்தி ஒழுங்காகப் போக முடியாதிருந்ததாலும் சுதனின் படிப்பு அங்கேயும் இங்கேயுமாய்த் தான் இழுபட்டுக் கொண்டிருந்தது. தங்கை காவ்யா மட்டும் எப்பாடு பட்டாலும் படிக்க வேண்டும் என்ற உறுதியுடன் இருந்தாள். அவள் நன்றாகவும் படித்ததால் அவளது கற்றல் மட்டும் ஆசிரியர்களின் உதவியுடன் தங்கு தடையின்றித் தொடர்ந்து கொண்டிருந்தது. அப்படியும் இப்படியுமாய் பத்தாவதைத் தாண்டியதுமே படிப்புக்கு முழுக்குப் போட்டு விட்டு தாய்க்கு ஒத்தாசையாய் கடைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு விட்டான் சுதன். மனதாலும் உடலாலும் பெரிதும் சோர்வுற்றிருந்த உமாவை, நோய்களும் அவ்வப்போது சீண்டிப் பார்த்துக் கொண்டிருக்கவே, சுதனின் இந்த முடிவு அவளுக்கும் பெரும் ஆறுதலைக் கொடுத்தது எனலாம்.


இரண்டு வருடத்துள் தங்கை காவ்யா பல்கலைக் கழகத்துக்குத் தெரிவாகிப் படிக்க என்று சென்ற பின்னர், சுதனின் நிலை உமாவுக்குள் குற்ற உணர்ச்சியை ஏற்படுத்தி இருக்க வேண்டும். எப்பாடு பட்டாவது அவனை வெளிநாட்டுக்கு அனுப்பி வைப்பதற்கான ஆயத்தங்களில் இறங்கி விட்டாள். சுதனுக்கு முதலில் பெரிதாக ஆர்வம் வராத போதிலும் விசயத்தைக் கேள்விப்பட்ட அனைவரும் இனியாவது உமாவுக்கு விடிவு வந்து விடும் என்பது போன்று பேசவும், தாயாருக்காகவாவது வெளிநாடு சென்று உழைக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்து விட்டான் சுதன்.

கையில் இருந்த பணத்துடன் தெரிந்தவர்களிடமும் கடனை வாங்கி மகனை ஒஸ்ரேலியாவுக்கு அனுப்பியதுடன் உமா நிம்மதிப் பெருமூச்சு விட்டுக் கொண்டாள். மகனின் எதிர்காலம் இனிஒரு விடிவுக்கு வந்து விடும் என்பதில் அவளுக்கு அசையாத நம்பிக்கை. ஒஸ்ரேலியாவில் எப்படியாவது வாழ வேண்டுமே என்ற தேவை உந்தித் தள்ள, பெரும்பாடு பட்டு ஆங்கிலத்தைக் கற்க முனைந்தான் சுதன். நான்கு வருட கடும் முயற்சிக்குப் பிறகு ஆங்கிலம் ஒரளவுக்குக் கை வந்து விட்டதெனலாம். தான் ஆங்கிலத்தைச் சரியாகத் தான் பேசினாலும், சில நேரங்களில் இந்த வெள்ளைக்காரனுக்கு ஏன் தான் விளங்கவில்லை என்பது இன்றுவரை அவனுக்குப் புரியாத புதிர்தான்

அவன் வேலை செய்யும் இடத்தில்,பெரிய பெரிய மெசின்கள், சுற்றிச் சுற்றி ஓடிக் கொண்டு பாலைப் போத்தலில் நிறைக்கும் அழகே அலாதி, மறுபக்கத்தில் வரிசையாய் வரும் மூடிகள் போத்தலின் வாயில் நின்று கொள்ளும், அடுத்ததாக உள்ள மெசின் மூடியைத் திருகிப் பூட்டி விடும், பின்னர் பால் நிறைந்த போத்தல்களை ரோபோ மெசினின் கை ஒன்று வரிசையாய் எடுத்து ஒரு பிளாஸ்டிக் பெட்டிக்குள் அடுக்கி வைக்கும், அது அப்படியே அசையும் நாடாவினூடு சென்று விநியோகத்துக்கு தயாராகும் விந்தையை, வந்த புதிதில் வாய் திறந்து பார்த்து நின்றிருக்கிறான். இப்போது அத்தனையும் அலுத்துப் போய், மெசின்களோடு தானும் ஒரு மெசினாய் எப்படியோ எட்டு மணி நேரத்தைக் கடத்தி விடுகின்றான்.

எவ்வளவு நேரம் சிந்தனையில் உறைந்திருந்தானோ தெரியவில்லை, அவனது மேற்பார்வையாளர் அலெக்ஸ் வந்து கூப்பிட்டிருக்க வேண்டும். இவன் அசைந்து கொடுக்காமல் போகவே, மேசையில் தட்டிய போது தான் சுய நினைவுக்கு வந்து தலையை நிமிர்த்திப் பார்த்தான். மெசின் இவ்வளவு நேரமாய் ஓடாது விட்டால் கொம்பனிக்கு எவ்வளவு நஷ்டம் என்று அவன் விளங்கப்படுத்துவதை நின்று கேட்க வேண்டியது பெரும் கொடுமையாய் இருந்தது. அதைவிட வேலையிடத்தில் நித்திரை கொள்ளாமல் வீட்டிலேயே ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று இலவச ஆலோசனை வேறு வழங்கிக் கொண்டிருந்தான்.

ஓட்டமும் நடையுமாய்ச் சென்று மெசினை ஓட விட்டபோதும், அடங்காதவனாய் அலெக்ஸ் ஒரு விறைப்புடன் நிற்பதைக் கண்ணுற்றபோது சுதனின் மனமும் வெதும்பியது. திடீரென யாரும் வரவில்லை என்று சொன்னால் ஒரு மணி நேரம், இரண்டு மணி நேரம் என்றெல்லாம் அவன் சம்பளமின்றி வேலை செய்து கொடுத்திருக்கின்றான். அப்போதெல்லாம் இந்த அலெக்ஸ் எப்படிப் பாராட்டி இருக்கிறான். ஒரு பத்து நிமிடம் அன்னையின் நினைப்பில் அனைத்தையும் மறந்து விட்டது பெரிதாய் தோன்றுகிறதா இவனுக்கு?





ஏன் சொந்த மண்ணை, தாய் மொழி தவழும் ஊரை விட்டு வந்தோம் என்று தன்னையே நொந்து கொண்டான். ஒரு மாதிரி வேலையை முடித்துக் கொண்டு அறைக்குத் திரும்பியதுமே, அமைதி திரும்பும் என்று நினைத்ததும் வீணாகியது. கொரோனாவால் செய்த வேலை பறி போய் விட, வேறு வேலை ஒன்றைத் தேடிக் கொண்டிருக்கும் அறையின் சகவாசி செல்வம் சும்மாவே ஒரு சோம்பேறி.

கதவைத் திறந்ததுமே ஒரு பூஞ்சண வாடை முகத்தில் அறைந்தது. அறையை நிறைத்திருந்த சிகரெட் புகை வேறு குமட்டலை உண்டாக்கியது. அறையில் இருந்ததோ இரண்டு கதிரைகள் தான், அதிலும் இருக்க முடியாமல் செல்வத்தின் உள்ளாடைகளும் ஜீன்சும் இடம் பிடித்துக் கொண்டிருந்தன. அறையில் இருந்த கட்டிலில் கவிழ்ந்து குப்புறப் படுத்தபடி போனை நோண்டிக் கொண்டிருந்த செல்வத்தைக் காண்கையில் கோபம் கொஞ்சம் முளை விட்டது.
முன்பானால் அறை எப்படி இருந்தாலும் முகம் சுழிக்காமல் ஒதுக்க வேண்டியவற்றை ஒதுக்குவான். இறைந்து கிடப்பதை அடுக்கி வைத்து விட்டு தோய்க்க வேண்டியவற்றைத் தோய்க்கப் போடுவான். இப்போதோ ஊரில் அன்னையின் சுகவீனம் அவன் பொறுமையைத் தூக்கித் தூரப் போட்டிருந்தது.

“செல்வம், இந்த அறையைக் கொஞ்சமாவாது ஒதுக்கிக் கூட்டி வைக்கக் கூடாதா? சும்மாதானே இருக்கிறாய் றூமில்?” தன்னை விட இளையவன் செல்வம் என்பதில் எப்போதும் உரிமை எடுத்துக் கொண்டு ஒருமையில் தான் சுதன் பேசுவது வழமை.
“நான் சும்மா இருக்கிறேன் எண்டதைச் சொல்லாமல் சொல்லிக் காட்டுகிறீங்கள் அப்படித்தானே? நான் ஒண்டும் சும்மா இருக்கேல்லை, போன கிழமை வரைக்கும் நான் என்ர பங்குக் காசைச் சரியாகக் குடுத்திருக்கிறன்” செல்வத்தின் குரலிலும் வழமைக்கு மாறான சூடு.


“ஒரு றூமிலதானே நாங்கள் இருக்கிறம், அதில தான் சமைக்கிறம், கொஞ்சம் சுத்தமாய் வைச்சுக் கொண்டால் என்ன செல்வம்?” சமாதானத் தொனிக்கு சுதன் இறங்கி வந்திருந்தான்.

“எனக்கு நீங்கள் ஒண்டும் சொல்லித் தரத் தேவையில்லை, உங்கட வேலையை மட்டும் பாருங்கோ, மனிசருக்கு ஒரு இடத்திலயும் நிம்மதியில்லை”.. எண்டபடி சேட்டை மாட்டிக் கொண்டு வெளியில கிளம்பின செல்வம் போற போக்கில்
“ஊரில படிப்பறிவு இல்லாததுகள் எல்லாம் வெளி நாட்டுக்கு எண்டு கிளம்பி வந்து எங்களுக்குப் படிப்பிக்க வெளிக்கிடுதுகள்” எண்டு கேட்கட்டுமே என்பது போலச் சத்தமாய்ச் சொல்லிக் கொண்டு கதவை அடித்துச் சாத்திக் கொண்டு கீழ் இறங்கினான்.
முன்பானால் இருவரும் வேலை முடிந்து வந்ததும் ஒரு ரீயைப் போட்டுக் கொண்டு சுவரின் விளிம்பில் அமர்ந்து கொள்வார்கள். எத்தனை தான் களைப்பாய் இருந்தாலும், அன்று வேலையில் நடந்தது, வீட்டுப் புதினங்கள் என்று அனைத்தையும் பகிர்ந்து கொள்வதில் தம் மனச்சுமைகளை இறக்கி வைத்துக் கொண்டு விடுவார்கள். முடிந்தால் பின்னால் இருக்கும் கிரவுண்டில் நடக்கவோ காற்பந்து விளையாடவோ என்று போவார்கள். இல்லையென்றால் எண்பதுகளின் எஸ்பிபி பின்னணியில் ஒலித்துக் கொண்டிருக்க சமையல் வேலைகளைத் தொடங்கி விடுவார்கள்.

இப்போது எதிர்காலம் பற்றிய அச்சமோ என்னமோ இருவருக்கும் இடையே ஏதோ ஒரு திரை விழுந்திருந்தது. வேலை இல்லாவிட்டாலும் கொழுப்புக்குக் குறைச்சல் இல்லை என்று திட்டியபடியே அறையை ஒதுக்கத் தொடங்கினான். பாட்டு ஏதாவது போடலாம் என்று போனைக் கையில் எடுத்தபோதுதான் தங்கையின் ஐந்தாறு அழைப்புக்களைத் தவற விட்டிருந்ததைக் கவனித்தான்.

உலகத்துக் கடவுளை எல்லாம் துணைக்கு அழைத்துக் கொண்டு, பதட்டம் உடலெங்கும் குருதியோடு ஓடத் தங்கைக்கு அழைப்பேற்படுத்தினான்.
ஒரு அழைப்போடு, தங்கையின் "அண்ணா" என்ற அழுகைக் குரல் கேட்டதுமே அவனுக்கு மீதி சொல்லாமலே விளங்கி விட்டது. அவனுடைய அன்பான அம்மா அவனை விட்டு விட்டு போய் விட்டாரா? அவனுக்கு உலகமே ஒரு கணம் நின்று விட்டாற் போயிருந்தது. நினைவு தெரிந்த நாள் முதலாய் உறவினர்கள் யாருமே அவர்களோடு ஒட்டி உறவாடியது இல்லை. அவனுக்கு ஒரு உலகமும் அதில் ஒரு உறவும் இருந்தது என்றால் அது அம்மா மட்டும் தான். தன் பிள்ளை என்றால் எந்தத் தாயும் துடிப்பது வழமை தான். ஆனாலும் சுதன் நினைவு தெரிந்த நாள் முதலாய் அன்னையின் இறகுக்குள் தான் வளர்ந்திருந்ததில் இவனுக்காகவே வாழும் அம்மா தான் அவனுக்கு எல்லாமே.

இப்போது ஒஸ்ரேலியா என்று தொலை தூரம் வந்து விட்டிருந்தாலும் அம்மாவுடன் கதைக்காமல் அவனது பொழுதுகள் முடிவதில்லை. "தம்பி சாப்பிட்டியோடா" என்று தொடங்கி, தங்கையின் பிள்ளைகளைப் பற்றிச் சொல்லி, இவன் வேலைகளைப் பற்றிக் கேட்டு, கடைசியில் இவனுக்கு ஒரு கல்யாணம் கட்டித் தராமல் அனுப்பி விட்டதை நொந்து கொண்ட பின் தான் போனை வைப்பாள். தூரமாய் இருந்தாலும், வீடியோக் கோலில் ஒருவரின் முகத்தை ஒருவர் பார்த்தபடியே தத்தமது வேலைகளைப் பார்த்துக் கொள்வார்கள்.
தங்கை சொன்ன செய்தியில் அவனுக்கு உலகமே இருண்டு விட்டதாய் தோன்றியது. தங்கை மறுபக்கத்தில் அண்ணனைக் கூப்பிட்டுக் களைத்துப் போனவளாய், அவள் கணவனிடம் போனைக் கொடுத்திருந்தாள்.
"மச்சான், மாமிக்குச் சரியா ஏலாமல் போயிட்டுது, செய்ய வேண்டிய எல்லா ட்றீட்மெண்டும் செய்து பார்த்தனாங்கள்."
"ம்" சுதனுக்கு நிற்கக் கூட முடியவில்லை.
"மச்சான், மாமியிண்ட பொடியை நாளைக்குள்ள எடுத்திட வேணும். அதுதான் இப்பத்தைய சட்டம், இந்தக் கொரோனாவுக்குள்ள உங்களுக்கு வர ஏலாது தானே.. ?" மச்சான் செந்தில் முடிக்க முன்னம்,
"எனக்கு அம்மாவை கடைசியா ஒருதரம் எண்டாலும் பார்க்கோணும் செந்தில், என்ர அம்மா.." சுதன் சுய நினைவுக்கு வந்து வாய் விட்டுக் கதறத் தொடங்கினான்.
"ஆனா, இப்ப நீங்கள் இங்க வர வழியில்லத் தானே? நான் சொல்லுறதைக் கேளுங்கோ சுதன்"
"எதுக்கு நான் இங்க வர வேணும்? என்ர அம்மாவைக் கடைசியாப் பார்த்து பெத்த பிள்ளை எண்டு ஒரு கொள்ளி போடக் கூடக் குடுத்து வைக்காமல் போறதுக்கோ?" சுதனின் வார்த்தைகள் தெளிவின்றிக் குளறலாய் வெளி வந்தன.
"அழாதேங்கோ சுதன், நான் சொல்லுறது உங்களுக்கு விளங்குது தானே?" மச்சானின் பொறுமை அவ்வளவு தான்.
"இல்ல செந்தில், எனக்கு அம்மாவைப் பார்க்கோணும்" சுதனின் கதறல் அடங்குவதாயில்லை. செந்தில் போனைத் தங்கையிடத்தில் கொடுத்து விட்டிருந்தான்.



“அண்ணா, சொல்லுறதக் கேளு, எல்லாருக்கும் கவலை தான். நான் லிங்க் அனுப்புறன், நாளைக்கு லைவ்வில செத்த வீடு நடக்கிறதைப் பார், இப்பத்தைய நிலமையில அவ்வளவு தான் ஏலும், எனக்கு இங்க தலைக்கு மேல வேலையிருக்கு, எல்லாத்தையும் நான் தானே பார்க்கோணும்”. காவ்யா இணைப்பைத் துண்டித்து விட, போனைத் தூக்கி எறிந்து விட்டு நிலத்தில் விழுந்து கதறத் தொடங்கினான்.

பள்ளிக்குக் கூட்டிச் சென்ற அம்மா, ஒரு நேரம் கூடப் பசி பொறுக்க மாட்டான் என்று சொல்லிச் சொல்லியே ஒரு துண்டுப் பாணையாவது தேத்தண்ணியில் தொட்டுச் சாப்பிடத் தரும் அம்மா, வீட்டுக்கு நேரத்துக்கு வந்து விடவில்லை என்றால் தெரு முனையிலேயே காத்து நிற்கும் அம்மா, பக்கத்து வீட்டுக்காரப் பெடியனின் பேனையைக் காணவில்லை என்று இவனைக் குற்றம் சொன்ன போது, இவனிடம் ஒரு வார்த்தை கூடக் கேட்காமல் சிலிர்த்துக் கொண்டு சண்டைக்குப் போன அம்மா, இறுதியில் பேனை கண்டு பிடிக்கப்பட்ட பின், களவுப்பட்டத்தால் உடைந்து போயிருந்த சுதனைக் கட்டிக் கொண்டு கண்ணீர் விட்ட அம்மா. மார்க் குறைந்து போனால் கூட, “என்ர பிள்ளைக்கு நல்ல மூளை, அவனைப் படிக்கிறதுக்கு நான் விட்டால் தானே?” என்று தன் மேல் குற்றத்தைப் போட்டுக் கொள்ளும் அம்மா. எப்படிப்பட்ட அம்மா? அன்பைக் கொட்டுவதைத் தவிர எதையுமே தெரியாத அவனது அம்மா. அம்மாவைப் பற்றிய ஒவ்வொரு நினைவும் அவனைக் கொன்று தின்றன.
“எப்பிடி என்னை விட்டிட்டுப் போனீங்கள் அம்மா? எனக்கு இந்த உலகத்தில யார் துணை? சாப்பிட்டியா, குளிச்சியா என்று கேட்கக் கூட நாதியில்லாமல் இந்த உலகத்தில அநாதையாய் போனேனே அம்மா” யாருமில்லை என்பதில் வாய் விட்டே கதறி அழுது கொண்டிருந்தான் சுதன்.

இருட்டி விட்ட பின்னரும் எழும்பி லைட்டைப் போடக் கூடத் தோணவில்லை மதனுக்கு. இருளே அவனுக்கு சுகமாய் இருப்பது போல இருந்தது. காலை வரையில் கேட்க நாதியே இல்லாமல் அழுது கொண்டே இருந்தான். அழுதழுது நொந்த கண்கள் சூரிய வெளிச்சம் அறைக்குள் நுழைந்த போது கூசிக் கொண்டன.
நேற்று மதியத்துக்குப் பிறகு சொட்டுத் தண்ணீர் கூட அவனது தொண்டைக் குழிக்குள் இறங்கவில்லை. போனை எடுத்துப் பார்த்தான். அவனது பெரியம்மா கோல் எடுத்திருப்பது தெரிந்தது. யாருடனும் கதைக்கும் மன நிலை இருக்கவில்லை அவனுக்கு. தங்கை அம்மாவின் செத்தவீட்டைப் பார்ப்பதற்கான இணைப்பை அனுப்பியிருந்தாள்.
மெல்ல எழுந்து தண்ணீர் கொஞ்சம் வார்த்தெடுத்துக் குடித்துக் கொண்டான். அன்னை இறந்து விட்டார் என்பதை இன்னமும் நம்ப முடியவில்லை. எனக்கு இனிமேல் யார்? அது ஒன்றுதான் அவன் முன் பூதாகரமாய் எழுந்து நின்ற கேள்வி. உங்களை விட வேறு யாரும் எனக்கென இல்லை என்பது உங்களுக்குத் தெரியாதா அம்மா? சுய இரக்கத்தில அடங்கிய அழுகை மீண்டும் கசிய ஆரம்பித்தது.

மணி பதினொன்றுக்குத் தான் இணைப்புக் கிடைக்கும் என்று தங்கை குறிப்பிட்டிருந்தாள். நிமிட முள் மெதுவாக மெதுவாக நகர்வதைக் காண்கையில் பதினொரு மணிக்கு இன்னமும் நீண்ட நேரம் இருப்பதாய்த் தோன்றியது. அம்மாவை உயிரற்ற உடலாகப் பார்க்க வேண்டும் என்று நினைவே அவனுள் பதைபதைப்பை உண்டாக்கியது.
நிலத்தில் மெல்லச் சாய்ந்து கொண்டான். இரவு முழுக்க உறங்காததுடன், அழுத களைப்பும் சேர்ந்து கொள்ள தன்னையறியாமல் கண் சொருகியிருக்க வேண்டும். திடீரென உறக்கம் கலைந்த போது இலங்கை நேரம் ஒரு மணியாகி இருந்தது. அன்னை இறந்து போனதும் அவளது இறுதிக்கிரியைகள் நடந்து கொண்டிருக்குமே என்பதும் ஞாபகத்துக்கு வர இதயம் கண்டபடி அடிக்கத் தொடங்கியது. அம்மாவைப் பார்க்க வேண்டுமே என்ற துடிப்பில் போனை எடுத்தான். அதன் சார்ஜ் போயிருந்ததில் போன் இறந்திருந்தது. அவசர அவசரமாய் போனுக்குச் சார்ஜ் கொடுத்து, உயிர்ப்பேற்படுத்திக் கொண்டே இணைப்பைக் கிளிக் பண்ணினான்.

அவசரத்துக்கு இணைப்பு ஏற்படுத்துவதாய் தெரியவில்லை. ரிவிக்கு இணைப்பை கொடுக்க, எதைக் கிளிக் பண்ணுவது என்பதே மறக்குமளவுக்கு மூளை வேலை நிறுத்தம் செய்திருந்தது. கைகள் நடுங்க, போனின் அத்தனை பட்டனையும் மாறி மாறி அமுக்கிக் கொண்டிருந்தான். அம்மாவை எடுத்துச் சென்று விடக்கூடாதே என்ற பதைப்பில் "அம்மா, அம்மா" என்பதையே வாய் மந்திரம் போல் சொல்லி அரற்றிக் கொண்டிருந்தது. மீண்டும் மீண்டும் ஏதோ செய்ததில் இணைப்பு வந்து சேர்கையில். ஒப்பாரிச் சத்தம் பின்னணியில் கேட்டுக் கொண்டிருக்க ஐயரின் கிரியைகள் நடந்து கொண்டிருந்தன.
"ஐயோ என்ர அம்மா. அம்மாவைக் காட்டுங்கோவன்" அவன் வாய் விட்டுக் கதறுவது யாருக்கும் கேட்பதாயில்லை.


வீடியோ சுற்றிச் சுற்றி வந்திருந்தவர்களைக் காட்டிக் கொண்டிருந்தது. அம்மாவை மாலில் கிடத்தி வைத்திருப்பது தெரிந்தது. அந்தத் தூணில் சாய்ந்தபடிதான் அம்மா இவனுடன் கதைப்பது வழக்கம்.

"அம்மா எழும்புங்கோ, என்னோட கதையுங்கோ, உங்களை ஒரு தரம் கட்டிப் பிடிச்சு அழக்கூடக் குடுத்து வைக்காத பாவியாகி விட்டனே". வீடியோ ஒவ்வொரு தரமும் சுற்றி வரும் போது அம்மாவின் முகத்தைக் காட்ட மாட்டார்களா என்று இவன் தவியாய்த் தவித்துக் கொண்டிருந்தான்.

தொடங்கும் போது அம்மாவை வடிவாகக் காட்டியிருக்க வேண்டும். இவன் தவிப்பைப் புரிந்து அன்னையின் முகத்தை வீடியோவில் மீண்டும் காட்டுவதாய்த் தெரியவில்லை. சடங்குகள் நடந்த போதெல்லாம், "நானில்லையே பக்கத்தில அம்மா". ஆற்றவோ தேற்றவோ யாருமின்றிக் கதறிக் கொண்டிருக்கையில் திடீரென்று அம்மாவின் முகம் திரையில் தெரிந்தது.

அம்மா வழமையிலே எந்தப் பட்டுப் புடவையும் உடுப்பதில்லை. அவளுடைய மெல்லிய உடம்புக்கு, சும்மா சாறியே வடிவாயிருக்கும். இப்போது அவளுக்குப் பிடித்த மரூண் கலரில் பட்டுப் புடவை கட்டியிருந்தார்கள். கண்கள் மட்டும் மூடி இருக்க நல்ல உறக்கத்தில் இருப்பவள் போன்று அமைதியாய் துயில் கொண்டிருந்தாள்.
"அம்மா, எழும்புங்கோ அம்மா, என்னை விட்டுட்டுப் போகாதேங்கோ, ஏனம்மா என்னை விட்டுட்டுப் போனீங்கள்?" கதறிக் கொண்டே ரீவியில் தெரிந்த அன்னையின் முகத்தை வருடிக் கொடுத்தான்.

"அம்மா முழிச்சுப் பாருங்கோ அம்மா". அவன் அழுவது அவன் அன்பான அன்னைக்கே கேட்காத போது, வேறு யாருக்கும் கேட்டு விடவா போகிறது?
பெட்டியை மூடி எடுத்துக் கொண்டு போக இவன் நிலத்தில் புரண்டு அழத் தொடங்கி இருந்தான். நிலத்தில் விழுந்து புரண்டு இவன் அழுதபடி இருக்க, அன்னையின் உடல் சிதையில் வைக்கப்பட்டு செந்திலால் தீ மூட்டப்பட்டது.



அன்னையின் மெலிந்த உடலைத் தீ தீண்டும் காணும் காட்சியை அவனால் பார்க்கவே முடியவில்லை. என்ன பாவம் செய்து விட்டேன் நான்? என்னைப் பெற்றவளைக் கடைசியில் ஒரு தரமாவது நேரில் பார்க்க முடியாமல் போவதற்கு என்ன பாவம் செய்தேன்? நித்திரை கொள்ளாமல் விட்டிருந்தாலாவது அன்னையின் முகத்தை இன்னும் கொஞ்ச நேரம் பார்த்திருக்கலாமே என்று தோன்றியது. அன்புக்குரியவரின் இறுதி நிகழ்வை ஒரு அந்நியன் போல தொலைவில் இருந்து பார்ப்பதை விடக் கொடுமையானது வேறு எதுவுமே இருக்க முடியாது. ஏன் எனக்கு இந்தத் தண்டனை? கேள்விகள் சுற்றி வரத் துவண்டு போனான் சுதன். பொழுது மங்கிய பொழுதில் மெதுவாய் எழும்பிப் போய்த் தலைக்குக் குளித்து விட்டுத் தலையைத் துவட்டாமலேயே கதிரையில் சாய்ந்து கொண்டான். அம்மாவின் நினைவுகள் அலையாய் மீண்டும் அவனுள் நிறைந்தன. வீட்டில் முழுகினான் என்றால் அம்மா சொல்லிக் கொண்டே இருப்பார்.

"தம்பி தலையை நல்லாத் துடையடா, இந்த ஓடிகொலோனையும் போடு, இல்லாட்டி உனக்கு தடிமன் வந்திடும்" என்று கொண்டே சூடாய் ஒரு ரீயும் போட்டு தருவார்.
"அம்மா நான் வளந்திட்டன்" என்றாலும் விட மாட்டார். ஓடிக்கொலோனை எடுத்துப் பூசிப் போட்டுத் தான் அடங்குவார். நினைக்க நினைக்க அன்னையின் அரவணைப்புக்காய் அவனது உடம்பின் ஒவ்வொரு அணுவும் ஏங்கியது.
வேலைக்கு எந்த அறிவித்தலும் சொல்லாததால், அங்கிருந்தும் அழைப்புகள் வந்து கொண்டிருந்தன. அதை விட தங்கை, ஒன்று விட்ட அண்ணன்மார் உறவினர்கள் என்று போன் அடித்துக் கொண்டே இருந்தது. மதனுக்கு பதில் அளிக்க வேண்டும் என்றே தோன்றாத ஒரு விரக்தி நிலையில் மூழ்கி இருந்தான்.

இரண்டு நாட்கள் கழித்துக் கோபம் தணிந்து நண்பன் செல்வம் வந்து கதவைத் திறந்தபோது அன்னையின் படத்தை முன்னால் வைத்துக் கொண்டு என்னமோ கதைத்துக் கொண்டிருந்த சுதனைக் கண்டு பயந்து விட்டான். தாய்க்குச் சுகம் இல்லை என்று சுதன் சொல்லியிருந்ததால் மேற்கொண்டு நடந்ததை ஊகிக்கக் கூடியதாயிருந்தது. எத்தனை கேட்டும் பதில் சொல்லாமல் தனக்குள் கதைப்பதும், அழுவதுமாய் இருந்த சுதனின் நிலை அவனுக்குக் கலக்கமூட்டியது. 000 க்கு அழைப்பை எடுத்து அம்புலன்சைக் கூப்பிட்டான். வந்தவர்கள் என்ன பெயர் என்று கேட்ட போது மலங்க விழித்த சுதனின் நிலையைக் கண்டு தானும் கதறி அழுதான் செல்வம். ஒரு மரம் போன்ற நிலையிலேயே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த நண்பனை வண்டியில் ஏற்ற உதவி செய்த செல்வத்துக்கு அடுத்தது என்ன செய்வது என்பதே தெரியவில்லை. தான் துணையாய் இருந்திருந்தாலாவது அவனைத் தேற்றியிருந்திருக்க முடியும் என்பது காலங் கடந்து உறைத்தது.

துக்க சூழ்நிலைகள் ஒவ்வொருவரிலும் ஏதோவொரு வகையில் மன அழுத்தத்தை ஏற்படுத்துகின்றன. சுற்றி இருப்பவர்களின் அன்பாலும் பரிவாலும் அதன் பரிமானமும் தாக்கமும் குறைக்கப்படுவதில் தான் பெரும்பாலானவர்கள் மனிதர்களாய் இன்றும் வலம் வந்து கொண்டிருக்கின்றார்கள். காயம் பட்ட உணர்வுகளைப் புரிந்து கொண்டு, அந்த மனக்காயங்களுக்கு மருந்தாவதில் மகாத்மாக்கள் ஆகுவோம்.



# தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாத ஐயர் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார் !



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண் .... அவுஸ்திரேலியா

உ. வே.சா என்றால் - உழைப்பு , வேகம் ,சாதனை என்றுதான் எடுத்துக் கொள்ள வேண்டும். எங்கள் தமிழ் மொழியின் ஏற்றத்தைப் பறைசாற்ற இலங்கியங்கள் குவிந் திருக்கின்றன என்று - மேடை களில் முழங்குகிறோம்.கருத்துக்களாய் கட்டு ரைகளை வரைந்து குவிக்கின்றோம்.பல்கலைக்கழகங்களில் பலவித ஆரா ய்ச்சிகள் செய்து நூல்களாய் வெளியிடுகின்றோம். இப்படி யெல்லாம் நாங்கள் செய்வதற்கு ஆதாரமாய் ஆணிவேராய் இருப்பவரை நினைத் துப் பார்க்க வேண்டாமா ? ஆம் .... கட்டாயம் நினைத்துப் பார்க்கவே வேண்டும். அந்தப் பேராளுமைதான் உ.வே.சா என்று அழைக்கபடும் தமிழ்த் தாத்தா டாக்டர் மகாமகோபாத்தியாய சாமிநாத ஐயர் அவர்கள் ஆவார்.

உ.வே.சா என்னும் மூன்று எழுத்து தமிழ் வரலாற்றில் பதிந்து விட்ட மந்திரச் சொல்லாகும். தமிழ் இலக்கிய வரலாற்றை ஆராய்வார்க்கு ஆதார சுருதியாய் அமையும் மூல மந்திரம் ஆகும். இம்மந்திரத்தை மறந்தால் எங்கள் தமிழன்னை கண்ணீர் வடிப்பாள். எங்கள் தமிழன்னை எங்களைத் தனது பிள்ளைகளென்றே எண்ணமாட்டாள்.

அந்த மந்திரச் சொல்லை மறப்பார் தமிழர் என்னும் நிலையில் இருக்கவே மாட்டா ர்கள். அப்படி அந்த மூன்றெழுத்து மந்திரம் பெற்ற முக்கியத்துவம்தான் என்ன? அந்த மந்திரமாய் விளங்கும் டாக்டர் சாமிநாத ஐயர் என்னதான் செய்துவிட்டார் ? அவர் மறைந்து விட்டார் என்று சொல்லுகிறார். ஆனால் அவருக்கு மறைவேயில்லை. அவ ரென்றுமே வாழ்ந்து கொண்டே இருக்கிறார் என்பது தான் நிதர்சனமாகும். மறைந் தவர் வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்றால் புதிராக இருக்கிறதா ? இன்று நாம் படி க்கின்ற பழந்தமிழ் இலக்கியங்களில் அவர் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார். ஒவ்வொரு பழந்தமிழ் இலக்கியங்களையும் தொட்டு வாசிக்கும் வேளை தமிழ்த் தாத்தாவும் உயிர்ப்புடன்தான் உலவுகிறார் என்று எடுத்துக் கொள்ளலாம் அல்லவா !

ஆங்கிலம் இவ்வுலக வாழ்வுக்கு பயனளிக்கும். வடமொழி அவ்வுலக வாழ்வுக்கு பயனளிக்கும் என்று உ.வே. சா அவர்களிடம் எடுத்துச் சொன்னால் ; அவர் " இவ்வுலகத்திலும் அவ்வுலகத்திலும் எனது அன்னைத் தமிழே பயனை அளிக்கும் " என்று துணிந்து சொல்லும் வகையில் இருந்திருக்கிறார் என்பது மனமிருத்த வேண்டிய கருத்தெனலாம். அந்த அளவுக்கு அன்னைத் தமிழினை அகமதில் சிம்மாசன த்தில் அமரச்செய்திருந்தார் எனலாம்.

உ.வே. சா அவர்களின் காலப்பகுதியில் ஆங்கிலம் சிம்மாசனத்தில் இருந்தது. ஆங்கிலத்தையே அனைவரும் ஏற்றினார்கள், போற்றினார்கள். அந்தணராய் பிறந்தாலும் வடமொழியினைப் பெரிதாக எண்ணாமல் வாடாத தமிழினையே வரவேற்று நின்றார்கள். இப்படி அக்காலத்தில் திகழ்ந்தமையால்தான் அவரை வாழ்ந்து கொண் டே இருக்கிறார் என்று சொல்லவேண்டி இருக்கிறது.ஆங்கிலத்தைப் படித்து பெரிய பதவிகளில் அமர்ந்திட அவர் ஆசை கொண்டார் இல்லை. அந்தணருக்கு உரிய வட மொழியிலே பாண்டித்தியம் பெற்று சிறந்த சிவாச்சாரியராய், வேத விற்பன்னராய் விளங்கிட விரும்பினார் இல்லை. ஆனால் தாயின் மொழியை, தாய்மண்ணின் மொழியை தனது மூச்சாயும் , பேச்சாயும், தொண்டாயும், அதனையே வாழ்வும் ஆக்கிக் கொண்டார் என்பதனால்த்தான் அவர் இன்னுமே எம்மிடையே வாழ்ந்து கொண்டு இருக்கிறார் என்கிறேன்.

ஆனந்த வருடம் ஆயிரத்து எண்ணூற்று ஐம்பத்து ஐந்தில் அவர் இம்மண்ணில் கால் பதிக்கின்றார். ஆனந்த வருடத்தில் பிறந்த காரணத்தால்த்தான் உ.வே.சா அவர்கள் அருந்தமிழினை ஆனந்தமாய் பருகி நின்றாரோ என்று எண்ணிடத் தோன்றுகிறது.

' கொடிது கொடிது இளமையில் வறுமை ' என்பது மூதாட்டி மொழிந்த மொழி. இஃது முற்றிலும் உண்மையே. வளரும் பருவ த்தில் வறுமை வாட்டினால் வளரும் நிலை என் னாகும் ? உ.வே. சா அவர்களின் இளமையும் வறுமையில் கிடந்து உழன்றது என் பதை அறிகிறோம். தந்தையின் பிரசங்க வருமானத்தில்த்தான் அவரின் வாழ்க்கைப் பய ணம் தொடரும் நிலை காணப்பட்டது. வருமானம் இல்லா நிலையில் அவரும் கூடவே தந்தையுடன் இளம் பராயத்திலே பிரசங்கம் செய்யும் பணியில் ஈடுபடுகிறார். வறுமை தாண்டவ மாடினாலும் தனது மகனை நன்கு கற்றிடச் செய்திடல் வேண்டு என்னும் எண்ணத்தை மட்டும் அவரின் தந்தை விட்டு விடவில்லை. கற்றவர் முன்னிலையில் தனது பிள்ளை வந்து நிற்க வேண்டும் என்று தந்தையார் ஆசைப்பட்டார். அதனால் பல நல்ல வல்ல குருமாரைத் தனது பிள்ளைக்குத் துணை யாக்கிக்கொடுத்தார். படிப்பதிலே நாட்டம் மிக்க பிள்ளையாய் உ.வே.சா விளங்கிய மையால் தந்தையின் எண்ணம் மிகவும் சிறப்பாய் ஈடேறியது எனலாம்.

பல ஆசிரியர்கள் உ.வே.சா வாழ்க்கையில் ஒளி ஊட்டினார்கள். பேரொளியாய் வந்தமைந்தார் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் எனலாம். மீனாட்சி சுந்தரம் பிள்ளை உ.வே.சா வாழ்க்கையில் உரமாய், வரமாய், அவரின் உயர்வின் உறுதுணை யாய் வந்து அமைந்தார் எனலாம். உ.வே.சா என்னும் ஆளுமையினை வெளியுலகுக்கு க்கு குறிப்பாக தமிழுலகுக்கு கொடுத்த பெருமை மீனாட்சி சுந்தரம்பிள்ளை என்னும் பேராசானுக்கே உரியது என்பதை எவருமே மறுப்பேசிட இயலாது எனலாம்.' எரிவிளக் காயினும் தூண்டு கோல் வேண்டும் ' என்பார். உ.வே.சா எரிவிளக்கு ! அவரின் ஆசிரி யர் நல்லதோர் தூண்டு கோல் ! என்ன பொருத்தம்! இதைத்தான் வரப்பிரசாதம் என்பர் ! " தாரமும் குருவும் தலை விதிப்படி " என்பார்கள். நல்ல விதியால் உ. வே. சா அவர்களுக்கு குருவும் வாய்த்தது. தாரமும் வாய்த்தது.

முறையான பாடப் புத்தகங்களில் உ.வே. சா படிக்கும் வாய்ப்பு அக்காலத்தில் இருக் கவில்லை.இப்போது இருப்பதுபோன்று அச்சிட்ட புத்தகங்கள்.குறிப்புப் புத்தகங்கள் என்று எந்தவித வசதிகளுமே இருக்கவில்லை. ஏடுகள்தான் துணை ! மனனம்தான் மா மருந்து ! எழுத்தணிதான் பெருந்துணை ! ஆனாலும் உ.வே. சா கற்றார். " கற்கக் கசட றக் கற்க - கற்பவை கற்க " என்பதை மனமிருத்தி உறுதியாய் கற்றார். இலக்கியம் கற்றார். இலக்கணம் கற்றார். இசையும் கற்றார். ஆங்கிலத்தை எழுத்தாய் கற்றார். அவரின் ஆசை அருந்தமிழின் பாலே பெருகி நின்றது எனலாம்.

பழந்தமிழ் இலக்கியங்கள் என்னும் கருவூலங்கள் பல ஏட்டிலே இருந்ததை யாவரும் அறிந்திட வேண்டும் என்னும் ஆவலினால் அவற்றை அச்சிற் பதிப்பிக்க வேண்டும் என்னும் மிகவும் சிறந்த சிந்தனை உ.வே.சாவின் எண்ணத்தில் உதயமானது. ஏட்டில் இருந்தால் நாட்டில் பலரும் அறியும் வாய்ப்பும் வராமல் போய்விடும். நாளடைவில் பொக்கிஷமான இலக்கியங்கள் மறைந்தும் போய் விடக்கூடும் என்னும் என்னும் ஏக்கம் அவரின் உள்ளதை உறித்தியபடியே இருந்தது. " தன்னை மறந்தாள் தன்னாமம் கெட்டாள் தலைப்பட்டாள் நங்கை " என்றபடி ; தனது சொந்தச் சுகத்தை மறந்தார், இளமையை மறந்தார், இன்பத்தை மறந்தார், எண்ண மெல்லாம் பழந்தமிழ் ஏடுகள் பற்றியதாகவே ஆக்கிக் கொண்டார்.





பிரயாணம் செய்வதற்கு தற்போது போன்று வசதிகள் பல  அக்காலத்தில் இருக்க வில்லை. அத்துடன் உ.வே.சா வசதிகள் வாய்ப்புகள் மிக்கவராயும் இருக்கவுமில்லை. ஆனால் - தான் எடுத்துக்கொண்ட பணியில் என்னதான் இடர் வந்தாலும் அவற்றைத் தாங்கி - தமிழ் ஒன்றே - இலட்சியம் என்று கங்கணம் கட் டிக் கொண்டு வண்டிகள் போகாத பாதையிலெல்லாம் வைராக்கியத்துடன் பயணப்பட்டார். பழந்தமிழ் ஏடுகளைத் தேடி பல மைல்கள் சென்றார். நடந்தார், மாட்டு வண்டியில் பயணப்பட் டார். அவமானப் பட்டார், ஆனாலும் தனது முயற்சியை மட்டும் விட்டாரில்லை.

ஏடுகள் தேடிப்போகும் பொழுது அவர்பட்ட அல்லல்களையும் , அவர்பட்ட வேதனை களையும், அவருக்குண்டான அவமானங்களையும் தனது நுலான " என் சரித்திரத்தில் " எழுதிக் குவித்திருக்கிறார். என் சரித்திரம் என்பது தமிழருக்கெல்லாம் நல்ல ஒரு பாடப் புத்தகம் எனலாம். படித்துப் பாருங்கள் உ.வே.சா என்னும் மூன்றெழுத்து மந்தி ரத்தின் உன்னதத்தை உணர்ந்து கொள்ளுவீர்கள்!

ஏடுகளின் அருமை தெரியாமல் தீயில் இட்டார்கள். ஓடும் நீரில் எறிந்தார்கள். கறை யான் அரித்திடுவதைக் கண்டு கொள்ளாமலே இருந்தார்கள். இவற்றைப் பார்க்கும் நிலையில் உ.வே.சா பதறித் துடித்தார்கள். தழிச் சொத்து அழிவதை அவரால் தாங் கவே முடியாமல் போய்விட்டதாம் . கிடைத்தவற்றைக் காப்பாற்றி இன்று நாங்கள் படிக்கும் நூல்களாய் எமக்கு அளித்திருக்கிறார் உ.வே. சா என்றால் அவர் இன்னும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார் என்று சொல்லுவதில் என்ன தவறு இருக்கிறது ?

சிலப்பதிகாரமா சிறப்பதிகாரமா என்று மயங்கி நின்றவர்கள் மத்தியில் - சிலப்ப திகாரத்தை கொண்டு வந்தவர் உ.வே. சா அவர்கள். அவரில்லா விட்டால் சிலப்ப திகாரத்தை நாங்கள் அறிந்திருக்கவே முடியாமல் போயிருக்கும். அகநாநூற்றுக்கும் புறநாநூற்கும் என்னதான் வேறுபாடு என்பதையே தெரியாமல் போயிருக்கும். மணி மேகலை மண்ணுக்குள் மறைந்திருக்கும். சங்கத்தமிழ் , தங்கத்தமிழ்,  என்று மேடை களில் முழங்கவும், கட்டுரைகளில் வெழுத்துக் கட்டவும், கருத்தரங்குகள் பட்டிமன்றங் கள் வைத்துக் கருத்துக்கள் கூறவும் உற்றதுணை உ.வே,சா அவர்கள்தான் என்பதை அனைவருமே அகமிருத்துதல் அவசியமாகும். இவரின் தேடுதல் இல்லா நிலையில் தமிழின் இலக்கியம் என்பது வரண்ட பாலையாய் இருந்திருக்கும். இன்று வண்ணப் பூங்காவாய் மிளிர்கிறது என்றால் அதற்குப் பின்னால் இருப்பவர் உ.வே. சா என்னும் ஆளுமையே என்பதை மறுத்திடல் முடியுமா?

ஏடுகளைப் பரிசோதித்து சரியான விபரங்களுக்காக பல நாட்கள் அலைந்து திருந்து - அவற்று விளக்கங்கள் எழுதி , அடிக் குறிப்புகள் எழுதி, நூற்குறிப்பு எழுதி, யாவரும் நன்கு விளங்கும் வகையிலேயே பதிப்பினை மேற்கொண்டார்.இவரை ஏடுகாத்த ஏந்தல் எனலாம் , ஏட்டினை எழுத்துருவில் அச்சுவாகனம் ஏற்றிய அருந்திறலோன் எனலாம், குறிப்புகள் வரைந்து குறைகளைந்த குணாளன் என்று கூடச் சொல்லலாம் அல்லவா !

ஐம்பது ஆண்டுகாலம் ஏடுகள் தேடி அவற்றைப் பரிசோதித்து அவர் பதிப்பித்த நூல்களின் எண்ணிக்கை நூறாகும். சீவக சிந்தாமணி, மணி மேகலை, சிலப்ப திகாரம், புறநாநூறு, திருமுருகாற்றுப்படை, பத்துப்பாட்டு, பொருநராற்றுப்படை, சிறு பாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக் காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம், 12 புராணங்கள், பெருங்கதை, 9 உலா நூல்கள், 6 தூது நூல்கள், 3 வெண்பா நூல்கள், 4 அந்தாதி நூல்கள், 2 பரணி நூல்கள், 2 மும்மணிக் கோவை நூல்கள், 2 இரட்டை மணி மாலை நூல்கள், அங்கயற்கண்ணி மாலை, இதர சிற்றிலங்கள் 4 ; என்று நூறு நூல்களை 1878 இல் தொடங்கி 1942 வரை பதிப்பித்து பதிப்புத்துறையில் சாதனை படைத்து உ.வே.சா அவர்கள் தமிழுலகில் நிற்கிறார் என்பதை மனமிருத்துதல் அவசியமே மாகும்.

பதிப்புத்துறையில் கால்பதித்த உ.வே.சா அவர்கள் படைப்புத் துறையிலும் கால் பதித்து நின்றார் என்பதற்கு அவரால் படைக்கப்பட்ட நுல்களே சான்றாக விளங்கு கின்றன. மீனாட்சி சுந்தரம்பிள்ளை சரித்திரம், பழயதும் புதியதும், கண்டதும் கேட்டதும், நினைவு மஞ்சரி, என் சரிதம், மணிமேகலை கதைச்சுருக்கம், உதயணன் கதைச்சுருக்கம், சிலப்பதிகாரக் கதைச்சுருக்கம் , திருக்குறளும் திருவள்ளுவரும், மதியார்ச்சுன மான்மியம், புத்தர் சரித்திரம், தியாகராசச் செட்டியார் சரித்திரம், நல்லுரைக் கோவை , சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும் , என்னும் கட்டுரை நூல்க ளுடன் ; கயர்கண் மாலை,தமிழ்ப்பா மஞ்சரி ஆகிய கவிதை நூல் களையும் ஆக்கி அளித்திருக்கிறார்கள்.

தமிழுக்கு ஆற்றிய பணிகளுக்காக இவரை நாடி பல கௌரவங்களும் பட்டங்களும் வந்து சேர்ந்தன. சென்னைப் பல்கலைக் கழகத்தினால் முதன் முதலாக தமிழில் மதி ப்புறு முனைவர் அதாவது டாக்டர் பட்டம் பெற்றவர் என்னும் பெருமையினை உ.வே. சா - அவர்களே பெறுகிறார்கள்.ஆங்கில அரசும் இவரைவியந்து ' மகாமகோ பாத்தி யாய ' என்னும் கௌரவத்தை வழங்கியது. சங்கராச்சாரியார் சுவாமிகள் இவருக்கு தட்சினாத்திய கலாநிதி என்னும் பட்டத்தை வழங்கி ஆசிவழங்கினார்.பாரத தருமா மகா மண்டலத்தார் திராவிட வித்யபூஷணம் என்று பட் டம் வழங்கிப் பாராட் டியது. பதிப்புத்துறையில் இமயமாய் இருந்ததால் ' பதிப்புத்துறை வேந்தர் ' என்று கௌர விக்கப் பட்டார். எழுத்துலச் சித்தர் கல்கியால் ' தமிழ்த்தாத்தா ' என்றும், பரதியால் ' குடந்தை நகர் கலைஞர் ' என்றும் கௌரவிக்கப்பட்டார். தமிழ்த்தா என்னும் பெயர் உ.வே.சாவினை அடையாளப்படுத்தும் நல்ல பெயயராய் வல்ல பெயராய் அமைந்து விட்டது எனலாம்.இவரின் மகத்தான பணியினை மதித்து இந்திய அரசாங்கமே இவரு க்கு 2006 ஆம் ஆண்டில் தபால் தலை வெளியிட்டு கௌரவித்தது என்பதும் கருத்திரு த்த வேண்டியதேயாகும்.

தமிழ் ஆசிரியராய். தமிழ்ப்பேராசிரியராய், கல்லூரி முதல்வராய் எல்லாம் இவர் கடமை ஆற்றியிருக்கிறார்.இவர் பணியாற்றிய மாநிலக் கல்லூரியில் இவருக்குச் சிலை நிறுவப்பட்டிருக்கிறது. அதுமட்டுமன்றி இவர் பிறந்த உத்தமதானபுரத்தில் இவரை நினைவு கூரும் முகமாக உ.வே. சா நினைவு இல்லமும் அமைக்கப் பட்டிருக் கிறது.நூல்களையே உயிரென்று எண்ணியே வாழ்ந்தமையால் 1942 இல் இவரின் பெயரால் அதாவது உ.வே.சா நூல்நிலையம் சென்னை பெசண்ட் நகரில் தொடக்கப் பட்டது.

3000 க்கு மேற்பட்ட ஏட்டுச்சுவடிகளைச் சேகரித்து , கையெழுத்து ஏடுகளையும் சேகரித்து எமக்கு நூலாக்கிக் கொடுத்த இந்த மேதை உத்தமதானபுரம் வேங்கட சுப்பையர் சாமிநாத ஐயர் ஆவார். இவரை உ.வே.சா என்று மூன்றெழுத்து மத்திரமாய் தமிழர்கள் உச்சரித்துப் ஏற்றிப் போற்றி நிற்கிறார்கள்.மண்ணில் பிறப்பதால் மண் ணும் பயனுற வேண்டும். மக்களும் பயனுற வேண்டும். அப்படிப் பிறப்பவர்களைத் தான் யாவரும் அகத்தில் அமர்த்திக் கொண்டாடி வருவார்கள். அப்படிக் கொண்டாடிப் பெருமைப்படும் வகையில் யாரெல்லாம் இருந்தார்களோ அவர்கள் எல்லாம் வையத் துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர்கள் என்றே கருதப்படுவார்கள். அப்படி வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர்கள் மறைந்தாலும் அவர்கள் வாழ்ந்து கொண்டே இருக்கி றார்கள் என்று சொல்லுவதிலும் எந்தத் தவறுமே இல்லை. அந்தவகையில் எங்கள் தமிழ்த்தாத்தா உ.வே.சாசாமிநாத ஐயர் அவர்களும் வாழ்ந்து கொண்டே இருக்கிறார் என்பது பொருத்தமாய் இருகிறது அல்லவா !



"தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை"